விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 231 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 22 திங்கட்கிழமை (07.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இலங்கையில் இடம்பெற்றது இனப் படுகொலையே!

### பகிரங்கமாக தெரிவித்தது இந்தியா



(டில்லி)

இலங்கையில் இடம்பெற்றது இனப் படுகொலையே என இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். (05ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் - இலங்கைக் கடற்படை

### நடுக்கடலில் முறுகல்

(ராமேஸ்வரம்)

தமிழகத்தின் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று முன்தினம் சுமார் 524 விசைப் படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றுள்ளனர்.

அதன்போது அதி நவீன ரோந்து படகுகளில் சென்ற இலங்கை 15

## மின்னை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

### மின்சார சபை

(கொழும்பு)

தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக மின்சார விநியோகத்திற்கான தேவை கணிசமாக அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

எனவே நுகர்வோர் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என மின்சார சபை தெரிவிக்கின்றது. 15

### அரசியல் தீர்வு விடயத்தில்

## வெளிநாட்டு தலையீட்டை அனுமதிக்க மாட்டோம்

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன



(கொழும்பு)

அரசியல் தீர்வு விடயத்தில் வெளிநாடுகள் அழுத்தம் எதனையும் வழங்க முடியாது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் வழங்கிய நேர்காணலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை இறைமையுள்ள ஒரு நாடாகும். இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிட முடியாது. 15

## மரம் முறிந்து வீழ்ந்ததில் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு செல்ல இருந்த குடும்பப்பெண் ஒருவர் மீது மரம் முறிந்து விழுந்ததில் அவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் கடந்த ஜூலை 20ஆம் திகதி மீசாலை பகுதியில் இருந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு செல்வதற்காக பேருந்துக்காக காத்திருந்தார்.

இதன்போது வவுனியாவில் இருந்து 15

### 13ஆவது திருத்தம், நில ஆக்கிரமிப்பு தொடர்பில்

## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம்




(யாழ்ப்பாணம்)

காணி, பொலிஸ், நிதி, நிர்வாகம் உள்ளிட்ட முழுமையான அதிகாரங்களுடன் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தும்படி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்புவதென ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. 15

## தேங்காய் பறிக்க ஏறியவர் தவறிவீழ்ந்து உயிரிழப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் தென்னை மரத்தில் தேங்காய் பறிக்க ஏறிய நபர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அன்புபுரம் முழங்காவில் பகுதியைச் சேர்ந்த கருணாகரன் ரூபன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி முழங்காவில் கிருஷ்ணன் கோவில் வீதியில் குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் 15

## இணைய வழி முறையில் உள்ளூராட்சி மன்றங்கள்

### உள்ளூராட்சி அமைச்சு

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இணையத் தளத்தில் பணம் செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் ஏற்கெனவே 69 உள்ளூராட்சி நிறுவனங் 15

## ஜனாதிபதி வேட்பாளர்; பெரமுனவுக்குள் மோதல்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு முதல் காலாண்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளமை குறித்து தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குள் கருத்து முரண்பாடுகள் மேலோங்கியுள்ளன.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சமல் ராஜபக்ஷவை நிறுத்துவ 15

## வடக்கு ரயில் சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி ரயில் மாஹோ பகுதியில் காட்டு யானையுடன் மோதிய நிலையில் வடக்குக்கான ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வடக்கு பகுதிக்கான ரயில் சேவையில் தாமதம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்

திருகோணமலை- மயிலவெவ பகுதியில் காட்டு யானை தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ள நிலையில் மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் இருவரும் பயணித்துக் கொண்டிருந்தபோது நேற்று மாலை இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இதில் பக்மீகம- அடம்பன பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கே.சந்ரதாஷ சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (4-7)


## 14வது நினைவாண்டும் 34வது பிறந்தநாள் வாழ்த்தும்



மலர்வு 1989.08.07 உதிர்வு 2009.01.19

அமரர் சிறினிவாசன் சுபோதினி

ஆண்டுகள் பதினான்கு உருண்டு மறைந்தாலும்
உன் உயிர் மூச்சு மறைவதில்லை!
ஆயிரம் யுகங்கள் ஒடி ஒழிந்தாலும்
உன் நினைவுகள் ஒழிவதில்லை

மகளே! எங்கள் தவப் பயனே!
திருமகளே! - எங்கள்
செல்வமகள் நீ அம்மா
எம் உயிருள்ளவரை
என்றும் உன் நினைவுடன்....



4ஆம் வட்டாரம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு. (16636)

அன்புடன்:- அம்மா, அப்பா, தம்பி, அண்ணாமார்



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி. டயனா றெக்சலா
ஜெயக்குமார் அவர்களின்
அன்புத் தந்தை
அமரர்
அந்தோனிப்பிள்ளை
பிலிப்
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம். (16633)

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி
பாலமயூரா ஜெயதீபன் அவர்களுடைய
பாசமிகு தாயார்

அமரர் திருமதி ராகினி
பாலபாஸ்கரன்

அவர்கள் இறைபதமடைந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம் (16641)
யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை



## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



உனக்காக கவிதை எழுத எண்ணினோம் தீர்ந்தது எமது பேனாமையும்
புத்தகங்களும் மட்டுமே நான்கு எழுத்தில் "உலகம்" என உச்சரித்தோம்
மூன்று எழுத்தில் "அன்னை" என அழைத்தோம் இரண்டு எழுத்தில்
"தாயே" என எழுதினோம்
ஓர் எழுத்தில் எழுத எண்ணினோம் வரவில்லை எமக்கு வார்த்தைகள்
கீழே "ஆ" என அழுதோம் ஓடி வந்தாள் என் அன்னை
அப்போது தான் உனக்கு அப்படியும் ஒரு பெயர் உள்ளது என தெரிந்தது
நாம் பிறக்கும் போது உன் தொப்புள் கொடியை வெட்டியது
நம்மை பிரிக்க அல்ல
எம்மை பெற்ற உன்னை பாராட்டி வெட்டும் ரிப்பன் "அம்மா"....

கடந்த 20.07.2022 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தெய்வம்

அமரர் செல்லையா
சிவபாக்கியம்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின ஆத்மசாந்தி பிரார்த்தனைகள் இன்று 07.08.2023 திங்கட்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு,
077 375 6796 (16629)

இங்ஙனம்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்

# தவறினால் 13 ஐ இழக்க நேரிடும்

## அரசியல் விமர்சகர் கலாநிதி தயான் ஜயதிலக்க

(கொழும்பு)

**தற்போது அரசியலில் உள்ள தென்னிலங்கை முற்போக்கு சக்திகளும் எதிர்க்கட்சிகளும் வடக்கு,கிழக்கு அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஆண்டு இறுதிக்குள் மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துமாறு ஏகோபித்த கோரிக்கை விடுப்பதே பொருத்தமான நடைமுறையாகும்.**

தவிர்த்து நடைமுறைச் சாத்திய மற்ற நிபந்தனைகளை முன்வைப்பது 13ஆவது திருத்தச் சட்டத்தின் உள்ளீடுகளை, இழக்கும் நிலைமைகளை உருவாக்கும் என்று இராஜதந்திரியும் அரசியல் விமர்சகருமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான விஜயம், சர்வாட்சி மாநாடு, அத்துடன் 13ஆவது திருத்த சட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கான தனிநபர் அரசியலமைப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை ஆகிய தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நீண்ட வரலாற்றை கொண்டுள்ள தேசிய பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் கடந்த கால ஜனாதிபதிகள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி இருக்கிறார்கள்.

ஆனால், அவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டதாக இல்லை. இவ்வாறானதொரு சூழலில் தற்பொழுது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அறிவித்திருக்கிறார்.

உண்மையில் தற்போதுள்ள யதார்த்த நிலைமையை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலமானது ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு முன்னதான வருடமாகும். அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வருடமாகும்.

ஆகவே, இந்த காலப்பகுதிகளில் பிரதானமான விடயங்களை முன்நகர்த்துவதும் நடைமுறை சாத்தியமாகுவதும் மிகவும் கடினமான விடயமாகும்.

இவ்வாறான நிலையில் வட,கிழக்கு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் உட்பட எதிர்கட்சிகள் நடைமுறை சாத்தியமான விடயத்தை வலியுறுத்துவது பொருத்தமானதாகும்.

அந்த வகையில் தற்போதைய அரசியல் சூழலையும் புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணை பெற்று அதிகாரத்தில் உள்ள ஒருவர் அல்ல. அவர் தனிநபராக கூட மக்கள் ஆணை பெற்று பாராளுமன்றத்திற்கு வருகை தந்திருக்கும் நபரும் அல்ல. அவ்விதமான நிலையில் அவரால் பிரதானமான விடயங்களை முன்னெடுப்பது சாத்தியமற்றதொன்றாகும்.

அதனடிப்படையில் அவர் இந்தியாவிற்கான விஜயத்தை நிறைவு செய்துள்ளார். இந்த விஜயத்தின் போது திருகோணமலை நகரத்தை மையப்படுத்திய அபிவிருத்தி திட்டங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதனை விட தமிழ் நாட்டையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்குரிய முதற்கட்ட நடவடிக்கைகளுக்கும் இணக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.



இப்பின்னணியில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவர் நடவடிக்கைகளை எடுப்பாராக இருந்தால் நிச்சயமாக தென்னிலங்கையில் அது பெரும் எதிர்ப்பு பிரசாரத்திற்கு வித்திடும். அது மட்டுமன்றி ஜனாதிபதி ரணில் அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பினைக் கொண்டிருக்கையில் சவால்கள் அதிகமுள்ள விவகாரத்தினை முழுமையாக முன்னெடுக்க முனைவது தனது வாக்குவங்கி அரசியலுக்கு பின்னடைவாக அமையும் என்பதிலும் கவனத்தைக் கொண்டிருப்பார்.

ஆகவே தற்போதைய சூழலில் நடைமுறைச் சாத்தியமான விடயத்தை முன்வைப்பதே பொருத்தமான அணுகுமுறையாகும். குறிப்பாக மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் சம்பந்தமாக நிபந்தனைகள் விதிப்பதை விடுத்து அவற்றுக்கான தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியை வலியுறுத்துவதே பொருத்தமானதாகும்.

தமிழ் அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக பொலிஸ், காணி அதிகாரம், சமஷ்டி கோரிக்கை என்பவற்றை முன்வைத்துச் செல்வதானது தென்னிலங்கையில் உள்ள எதிர்ப்புச்சக்திகள் வலுவடைவதற்கே வழிசமைக்கும்.

அந்த நிலைமையானது, சில அரசியல் சக்திகள் ஒன்றிணைந்து 13இல் உள்ள பொலிஸ் அதிகாரம் உள்ளிட்டவற்றை பாராளுமன்றத்தின் ஊடாக நீக்குவதற்கான சூழலைக்கூட உருவாக்கிவிடும்.

அவ்விதமான நிலைமை ஏற்படுமாயின் அதிகாரப்பகிர்வுக்கான அடிப்படை விடயங்களையே இழக்க நேரிடும். அதனை மையப்படுத்தியே இந்த விடயத்தில் நகர்வுகளைச் செய்வதே முக்கியமானதாகும் என அவர் தெரிவித்தார். (நி)


குவியமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியும் இணைந்து நடாத்தும்

கருத்தாய்வுப்போட்டி - 2023

இக் கருத்தாய்வுப் போட்டி. மக்களையும். மக்கள் நிறுவனங்களையும். வளங்களையும் ஒருங்கிணைத்து. சமூகமேம்பாட்டை இலக்காக கொண்டு.தகவல் தளமாக இயங்கும் குவியமும். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியும் இணைந்து நடாத்தும் கருத்தாய்வுப் போட்டியாகும்.

வளர்ந்து வரும் புதிய தலைமுறையினரது சமூகம் சார்பான படைப்பாக்கத் திறனை ஊக்குவிக்கும் வகையிலும். மாணவர் சமூகத்தின் சமூக ஆய்வுத் திறனை விருத்தி செய்யும் நோக்கிலும் இந்த கருத்தாய்வுப் போட்டி நடத்தப்படுகின்றது.

இலங்கைவாழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை சமூகத்துக்கு வெளிக்கொணரும் முகமாகவும். அதற்கான தீர்வுகளையும். அவர்களே முன்வைக்கும் நோக்கிலும் இக் கருத்தாய்வுப் போட்டி நடத்தப்படுகின்றது.

போட்டிக்கான விபரங்கள்

1. தரம் 10 . தரம் 11 ( கனிஷ்ட பிரிவு). தரம் 12. தரம் 13 (சிரேஷ்ட பிரிவு ) பல்கலைக்கழக மாணவர்கள். மாணவ ஆசிரியர்கள். ஆசிரிய மாணவர்கள். பாடசாலை ஆசிரியர்கள் ( திறந்த பிரிவு) ஆகியவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றுவர்.
2. இலங்கைவாழ் மக்கள் எதிர்நோக்குகின்ற சமூகம் சார் பிரச்சினைகளை அடையாளங்காணுவதோடு அப் பிரச்சினைகளில் இருந்து மீளுவதற்கான முன்மொழிவுகளை முன்வைக்கக் கூடிய கருப்பொருளில் அமைந்த கருத்தாய்வு ஆக்கம்ாகவும். நல்ல கருத்தாளம் மிக்க ஆக்கமாகவும் எழுதப்பட வேண்டும்.

- நீங்கள் எழுதும் ஆக்கத்திற்கு பொருத்தமான தலைப்பை நீங்களே இட்டுக் கொள்ள வேண்டும் .
- உங்களது ஆக்கம் 300 சொற்களுக்கு குறையாமலும் 600 சொற்களுக்கு மேற்படாமலும். தமிழ்மொழியில் எழுதப்பட்ட ஆக்கமாக இருக்க வேண்டும்.
- நீங்கள் எழுதுகின்ற ஆக்கத்திற்கு பக்க இலக்கம் மிகத் தெளிவாக இடப்பட வேண்டும்.
- உங்களது ஆக்கங்கள் இன.மத.அரசியல் ரீதியான விரோதங்களை ஏற்படுத்துகின்ற விமர்சன ரீதியான ஆக்கமாக அமைந்தால் அவை நிராகரிக்கப்படும்.

3. உங்களின் ஆக்கம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஏழாம் திகதிக்கு (07/10/2023) முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு. பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**குவியம் இணைப்பாளர். இல 41A . கலாசாலை வீதி. திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.**

**அல்லது**

உங்களின் ஆக்கங்களை Pdf வடிவத்தில் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல் முகவரி - Kuviyamnetwork@gmail.com

4. போட்டியாளர்கள் தங்களின் சுயவிபரத்தை தனியாக எழுதி ஆக்கத்துடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். அதில் உங்கள் பெயர். நீங்கள் சார்ந்த நிறுவனத்தின் விபரம். பாடசாலையில் கல்வி பயிலும் மாணவராயின் நீங்கள் கல்வி பயிலும் தரம். வெற்றி பெற்றதை அறிவிக்கும் வகையில் தொலைபேசி இலக்கம். மின்னஞ்சல் முகவரி என்பன குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
5. உங்களின் ஆக்கம் வேறெங்கும் பிரசுரிக்கப்படாத புதிய ஆக்கம் என்பதை தகுதி வாய்ந்த சமூக பிரமுகர் ஒருவரால் அவர்களுடைய பதவியை குறிப்பிடக்கூடிய வகையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (சமூக பிரமுகர்- பாடசாலை அதிபர். நிறுவன தலைவர். கிராம சேவகர்)
6. போட்டி முடிவுகள் குவியம் இணையத்தளத்திலும் (https://www.kuviyam.org/), குவியம் முகநூலிலும் (https://www.facebook.com/groups/147527711594685) பதிவிடப்படுவதுடன். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாத்திரம் நாம் தனிப்பட்ட ரீதியாக தொலைபேசி மூலமும். மின்னஞ்சல் மூலமும் அறியத் தருவோம்.
7. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும். பரிசில்களும் வழங்கப்படும். பரிசில்கள் விபரம்

| | |
|---|---|
| 1. முதலாம் பரிசு | - 7500/= |
| 2. இரண்டாம் பரிசு | - 5000/= |
| 3. மூன்றாம் பரிசு | - 2500/= |

மேலும் 1000/= ரூபாய் பெறுமதியான ஐந்து ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும். (நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது)

8. இதில் சிறந்த கருத்தாய்வு ஆக்கமாக நடுவர்களால் தெரிவு செய்யப்படுபவை அவர்களுடைய பெயரிலேயே எமது குவியம் இணையத்தளத்திலும் (https://www.kuviyam.org/), குவியம் முகநூலிலும் (https://www.facebook.com/groups/147527711594685) பதிவிடப்படும். இதன் மூலம் மாணவர்களின் படைப்பாற்றலுக்கான ஒரு சிறந்த அங்கீகாரம் என்றென்றும் கிடைக்கப் பெறும்.

மேலதிக தொடர்புகளுக்கு
குவியம் தொ.இல - 072 811 1147
மின்னஞ்சல் முகவரி - Kuviyamnetwork@gmail.com

நன்றி

திரு.கோவிந்தப்பிள்ளை சுப்பிரமணியம்.
(ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்) - 0773518308
திட்ட இணைப்பாளர், குவியம்.
(16505)


# சொக்கலேட்டுக்குள் மனித விரல்

(கொழும்பு)

மஹியங்கனை வைத்தியசாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினம் உணவகம் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்த சொக்லேட் ஒன்றில் மனித விரலின் ஒரு பகுதியை கண்டெடுத்துள்ளார்.

பின்னர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து .இன்று திங்கட்கிழமை மஹியங்கனை நீதிவான் நீதிமன்றத்தில் இது தொடர்பான உண்மைகளை அறிக்கையிட்டு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா–வெஸ்ட் இண்டீஸ் போட்டி
# தாமதமாக பந்து வீசியதால் இரு அணிகளுக்கும் அபராதம்



இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான முதல் இருபது20 போட்டி தரோபாவில் உள்ள பிரையன் லாரா ஸ்டேடியத்தில் நடைபெற்றது. டாஸ் வென்று முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 149 ரன்கள் எடுத்தது. அதிக பட்சமாக ரோமன் பாவெல் 48 ரன்கள் குவித்தார். நிகோலஸ் பூரன் 41 ரன்கள் எடுத்தார். இந்திய அணி சார்பில் அரஷ்தீப் சிங், யுஸ்வேந்திர சாஹல் தலா 2 விக்கெட் கைப்பற்றினர். இதையடுத்து, 150 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக் குடன் களமிறங்கிய இந்திய அணி 145 ரன்கள் மட்டுமே எடுத்தது. திலக் வர்மா அதிர டியாக ஆடி 39 ரன்னும், சூர்ய குமார் யாதவ் 21 ரன்னும், கப்டன் ஹர்திக் பாண்ட்யா 19 ரன்னும் எடுத்தனர். இதன் மூலம் 4 ரன்கள் வித்தியாச த்தில் வெஸ்ட் இண்டீஸ் திரில் வெற்றி பெற்றதுடன், இருபது 20 தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில், முதல் இருபது 20 போட்டியில் தாமதமாக பந்து வீசியதற்காக இந்திய அணிக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 5 சதவீதம் அபராதம் விதித்தது ஐ.சி.சி இதேபோல் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு 10 சதவீதம் அப ராதம் விதித்துள்ளது ஐ.சி.சி. (4)

# உலக வில்வித்தை சாம்பியன் ஷிப்;
## தங்கம் வென்று சாதித்த இந்திய வீராங்கனை



உலக வில்வித்தை சாம் பியன்ஷிப் போட்டி ஜேர்மனி தலைநகர் பேர்லினில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன் தினம் நடந்த பெண்களுக்கான தனிநபர் பிரிவின் இறுதிச் சுற்றில் 17 வயது இந்திய வீராங்கனை அதிதி ஸ்வாமி 149-147 என்ற புள்ளிக் கண க்கில் மெக்சிகோவின் ஆன்ட்ரியா பிசேர் ராவை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை தனதாக்கினார்.

இதன்மூலம் மகாராஷ் டிராவைச் சேர்ந்த அதிதி உலக வில்வித்தை சம்பியன்ஷிப் போட்டியின் தனிநபர் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார். (நி)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- புதிய செம்மணி வீதி
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்

(16639)

**076 788 0591**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூர் மெயின் றோட்டுடன் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை றோட் புத்தூர் சந்தியில் இருந்து 1 கிலோ மீற்றர் தூரம்
- குடியிருப்பு சூழ உள்ள காணி
- நன்னீர் ஊற்று
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

(16639)

**076 826 0354, 076 057 0354**

## மரண அறிவித்தல்

பிறப்பு 1945 - 10 - 14



இறப்பு 2023 - 08 - 06

## கிட்டிணன் செல்லத்துரை

சோளங்கனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் செல்லத்துரை அவர்கள் நேற்று (06.08.2023) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டிணன் - லட்சுமியின் மூத்த புதல்வனும் செல்வராணியின் அன்புக் கணவரும் செல்வரதி, ராசகுமாரி, அருந்தவநாதன், மதுரா ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராசா, தங்கராசா, ஜீவனா, சசிகுமார் ஆகியோரின் மாமனாரும் ஜெனனி, சாந்தபிரதீப், ஜெனிவா, கிரிதீபன், ஜெயச்சந்திரிக்கா, தர்சிகா, கபிலன், அபிலாஸ், டோன்சன் ஆகியோரின் அம்மப்பாவும் அர்ச்சனா, அச்சுதன் ஆகியோரின் அப்பப்பாவும் சந்தனாவின் அன்புப் பாட்டனும் ஐயாத்துரை, காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.08.2023) செவ்வாய்க் கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்

(C-7022) 077 015 6898


# இராசிபலன்

07.08.2023
ஆடி 22, திங்கட்கிழமை
சஷ்டி முற்பகல் 11.51 மணிவரை
ரேவதி முற்பகல் 8.30 மணிவரை

சுபநேரம் - 12.04 - 1.34 மணிவரை
இராகுகாலம் - 7.34 - 9.04 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தரம்.

வளவன்




வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்களை தேடி வரலாம். கனவு பலிக்கலாம், போசன சுகமுண்டு.




வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்து கொள்ள வேண்டிய நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




எண்ணிய கருமங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப் புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு. கௌரவமான நாள்.




பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு,




பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை தொனிக்கும், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், ஆன்றோர் சந்திப்புகள் இடம்பெறலாம்.




திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பாசப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், வழிபாட்டில் பெரிதும் கவனம் செலுத்த வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்களின்போது பொருட்களில் கவனம் தேவை, உடல் நலனில் கவனம் தேவை.




நெடுநாள் கனவுகள் நிறைவேறும் நாள், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்




எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரும், காரிய அனுகூலமுண்டு, பக்திபலமாக இருப்பவர்களின் எண்ணிய காரியம் கைகூடும்.

மடையனுக்கு மறுமொழி சொல்வது வீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே

## இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா

(டில்லி)

**இலங்கையில் இடம்பெற்றது இனப் படுகொலையே என இந்திய உள் துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித் துள்ளார்.**

கடந்த மாதம் 27ஆம் திகதி இராமேஸ்வரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன் றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



தமிழக பாரதிய ஜனதா கட்சியின் அமைப்பாளரான அண்ணாமலை "என் மண் என் மக்கள்" என்ற பெயரில் பாதயாத்திரை ஒன்றை தற்போது ஆரம்பித்து நடத்தி வருகிறார். அதன் தொடக்க நிகழ்வு இராமேஸ்வரத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில், "காங்கிரஸ் மற்றும் திமுகவின் ஐக்கிய முற் போக்கு கூட்டணியின் ஆட் சிக் காலத்தில்தான் இலங் கையில் தமிழர்கள் இனப் படுகொலை நடந்தது, தமிழக மீனவர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளானார் கள்" என தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமி ழர்கள் கொத்துக் கொத்தாக கொன் றொழிக்கப்பட்ட போதும் அப்படி நடக்கவே இல்லை என சிங்களம் முழு பூசணிக்காயை சோற்றில் இதுநாள்வரை மூடி மறை த்து வந்துள்ளது. ஆனால் இதனை எத்தனை கால த்திற்கு தான் மறைக்க முடி யும்.

1983 ஆம் ஆண்டு ஒக ஸ்ட் 16 ஆம் திகதி இந்தி யாவின் முன்னாள் பிரதம ராக இருந்த இந்திராகாந்தி இந்திய பாராளுமன்றில் ஆற்றிய உரையில் இல ங்கையில் நடப்பது இனப் படுகொலை என்று தெரி வித்தார்.

அவர் கூறி 40 ஆண்டுகளின் பின்னர் தற் போது இந்தியாவின் முக்கிய பொறுப்பில் உள்ள உள் துறை அமைச்சர் இலங்கை யில் நடந்தது இனப்படு கொலைதான் என தெரி வித்துள்ளமை சிங்கள த்தின் பொய்யான வேட த்தை துகிலுரித்து காட்டி யதை வெளிப்படுத்தியுள்ள தாக பலரும் தெரிவிக்கின் றனர். (நி)

# கேள்வி அறிவித்தல்

## நெடுந்தீவு பிரதேச சபை

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG)– 2023

01. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) 2023 நிதி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களிற்கு கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், உள்ளூர் அதிகாரப் பெறுகைக்குழு, நெடுந்தீவு பிரதேசசபை, அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு,வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமானதரத்தில் வீதிவேலை அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு பெற்றிருத்தலும் வேண்டும்.
05. தகைமைத் தேவைப்படுத்தல்கள் கேள்வி ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் கேள்வி ஆவண அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதானவீதி, நெடுந்தீவு, (தொலைபேசி: 021 221 5211) இல் இருந்து 07.08.2023 தொடக்கம் 28.08.2023 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
07. மேற்கூறிய இடத்தில் ஆர்வமுள்ள கேள்வி தாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் 07.08.2023 ஆம் திகதியிலிருந்து 28.08.2023 திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணம் ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1500/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதானவீதி, நெடுந்தீவு எனும் முகவரிக்கு 28.08.2023 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 21.08.2023 திகதி காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். .

| இல. | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீடு செலவு (VAT தவிர்ந்த ) (மில்.ரூபா வில்) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவைப்படும் தரம் | விலைமனுவை சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலப்பகுதி | | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் காலப்பகுதி | திகதி | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| 1 | NP/14/41(7)/02/ /PSDG/2023/02 | Improving Facilities in Cultural Hall | 1.05 | 60 நாட்கள் | C9/C8 (Building) | 49 நாட்கள் | 16.10.2023 | 11,000.00 | 13.11.2023 |
| 2 | NP/14/41(7)/02/ /PSDG/2023/03 | Repair of fencing in delft Manaltharai guest house | 0.56 | 45 நாட்கள் | C9/C8 (Building) | 49 நாட்கள் | 16.10.2023 | 6,000.00 | 13.11.2023 |

**தலைவர்**
**உள்ளூர் அதிகார பெறுகைக்குழு,**
**நெடுந்தீவு பிரதேச சபை,**
**07.08.2023**

(சி-7019)

# நானாட்டான் நறுவிலிக்குளம் கிராமத்தில் காற்று மின்சக்தி நிலையம் திறந்து வைப்பு

## கிராம மக்கள் எதிர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு



(மன்னார்)

"இயற்கையோடு இணைந்த நிலையான வளர்ச்சி திட்டத்தின் கீழ்" மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரி வில் உள்ள நறுவிலிக் குளம் கிராம பகுதியில் "ஹிருரஸ பவர்" நிறு வனத்தினால் அமைக் கப்பட்ட 15 மெகா வாட் காற்று மின் சக்தி நிலையம் நேற்று ஞாயி ற்றுக்கிழமை மின் சக்தி, மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டது.

எனினும் குறித்த காற் றாலை மின்சக்தி நிலைய திறப்பை கண்டித்து நறு விலிக்குளம் கிராம மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன் னெடுத்தனர்.

குறித்த காற்றாலை மின் உற்பத்தி நிலைய த்தில் உள்ள காற்றாலை மின் கோபுரத்தினால் தாங் கள் பல்வேறு அசௌகரிய ங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், இவ் விடயம் தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், உரிய திணைக்கள அதிகாரி களுக்கு பல தடவை கோரிக்கை விடுத்தும் எவ்வித நடவடிக்கை களும் முன்னெடுக்க வில்லை என அந்த மக் கள் விசனம் தெரிவித் தனர்.

குறித்த பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் அதிக மானவர்கள் அருகில் உள்ள கடலை நம்பி வாழ் ந்து வருவதாகவும், இத னால் அவர்களின் கடல் தொழில் நடவடிக்கை பாதிக் கப்படுவதாகவும், குறிப்பாக இரவு நேர ங்களில் காற்றாலை கோபு ரங்களில் இருந்து வெளிவரும் சத்தத் தினால் தாங்கள் பல்வேறு இடர் களை சந்திப்பதாகவும், இரவு நேரங்களில் உரிய முறையில் நித்திரை கொள்ள முடியாத நிலை உள்ளதோடு,மாணவர்க ளின் கற்றல் நடவடிக்கை கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக தமது கிராம த்தில் மக்கள் குடியிருப்பு க்குள் அமைக்கப்பட்டுள்ள 2 மின் காற்றாலை கோபு ரங்கள் உடன் அகற்றப்பட வேண்டும் என அந்த மக்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

இதன் போது போரா ட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாச கங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போரா ட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

(நி-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்பமான காலநிலையை எதிர்கொள்ள அதிகமான நீரை குழந்தைகளுக்கு கொடுங்கள்

## குழந்தை மருத்துவ நிபுணர் அருள்மொழி

(அராலி)

**வட மாகாணத்தில் தற்போது அதிக வெப்பமான காலநிலை ஏற்பட்டுள்ள நிலையில் சிறுவர் மற்றும் குழந்தைகளுக்கு சுத்தமான நீரை அதிகம் பருகுவதற்கு வழங்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கே.அருள்மொழி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் தற்போது சூழல் வெப்பநிலை வழமையை விட அதிகரித்துள்ள நிலையில் குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் உடல் ஆரோக்கியம் தொடர்பில் பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

குறித்த காலப் பகுதியில் குழந்தைகள் சிறுவர்களுக்கு அதிக வியர்வை ஏற்படுவதுடன் உடலில் பருக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

இவ்வாறு பருக்கள் ஏற்படும் போது உடலை சுத்தமாக வைத்திருக்காவிட்டால் கிருமித் தொற்றுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ள நிலையில் பெற்றோர்கள், சிறுவர்கள், குழந்தைகளின் உடல் சுத்தத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

தோலில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உரிய வைத்திய ஆலோசனைகளை பெற வேண்டும்.

அத்துடன் வெப்பமான காலநிலையை எதிர்கொள்வதற்கு குடிநீரை அதிகம் பருகுவதுடன் கிருமி நாசினிகள் பாவிக்காத பழவகைகளை உண்ணுவது சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-104)

## மஹோற்சவ பெருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-கோவிற்குடியிருப்பு சந்தன முதலிச்சிபுல அருள்மிகு ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 10 ஆம் திகதி வியாழக்கிழமை மாம்பழத் திருவிழாவும் 12 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும். (நி-30)

## 228 கிலோ கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபரை மடக்கிப் பிடித்த வட்டுக்கோட்டை மக்கள்



(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, பொன்னாலை பகுதியில் வைத்து கேரளக் கஞ்சாவுடன் 31 வயதுடைய சந்தேகபர் ஒருவர் வட்டுக்கோட்டை மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகமான முறையில் வீதியில் சென்ற கயஸ் வாகனத்தை வட்டுக்கோட்டை - பொன்னாலை பகுதி மக்கள் வழிமறித்து சோதனையிட்டனர்.

இதன்போது வாகனத்தில் 227 கிலோ 918 கிராம் எடையுள்ள கஞ்சா இருப்பது அவதானிக்கப்பட்டது. இதன்போது வாகனத்தில் இருந்த மூவரில் இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்கள் கஞ்சாப் பொதிகள் மற்றும் வாகனம் என்பவற்றுடன் சந்தேகநபரையும் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (நி-104)

## வரலக்ஷ்மி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் வரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை10 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, மஹாலக்ஷ்மி அம்பாளிற்கு விஷேட பூஜை, வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திரு வீதி வலம் வருதலைத் தொடர்ந்து நோன்புக்காப்பு வழங்கப்படும்.

நோன்புக் காப்பு எடுக்கும் அடியவர்கள் 23 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் பெயர் நட்சத்திரங்களை பதிவு செய்து கொள்ளலாம் என பிரதம குரு. சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி)

## யாழில் "ஈ-குருவி நடை 2023"



(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்திகளை பெறுமதி சேர்க்கை ஊடாக மதிப்பு கூட்டும் வகையிலான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் உருவாக்கும் வகையில் "ஈ-குருவி நடை 2023" நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் 9.30 மணி வரை நடைபெற்றது.

யாழ்ப்பாண பொதுநூலக முன்றலில் ஆரம்பித்த குறித்த நடைபயணமானது, வைத்தியசாலை வீதியூடாக சத்திர சந்தியினை அடைந்து, அங்கிருந்து கோட்டை சுற்றுவட்ட வீதியூடாக மீண்டும் பொது நூலகத்தினை வந்தடைந்தது.

உடல், உள ஆரோக்கியத்தை மேம்மடுத்த ஒவ்வொரு நாளும் 10,000 காலடிகள் நடப்பதையும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் மதிப்பு கூட்டுவதற்கான ஆதரவை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது.

ஈ-குருவி நடையானது கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் கனடா மற்றும் இலங்கையில் சமூகம் சார்ந்த விழிப்புணர்வினை மேற்கொள்ளும் நடையின் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

## மாவைக் கந்தனின் மஹோற்சவம்



இலங்கையில் வரலாற்றுப் பிரசித்தி பெற்றதும் சிறப்பு மிக்கதும் தொன்மையும் பழைமையும் வாய்ந்த மாவிட்டபுரம் ஸ்ரீ கந்சுவாமி ஆலய நிகழ்வுகள் அனைத்தும் தொன்றுதொட்டு திருக்கணித பஞ்சாங்க கணிப்பின்படி இடம் பெறுவது வழமை. அதன் பிரகாரம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலய காமயோற்சவ வருடாந்த திருவிழா இவ்வருடம் 22.07.2023 ஆம் திகதி ஆரம்பமாகி இனிதே நடை பெற்று வருகின்றது.

அதன் பிரகாரம் மாவைக் கந்தன் ஆலய திருவிழா காலங்களில் விஷேட தினமான திருக் கார்த்திகை திருவிழா எதிர்வரும் 09.08.2023 அதிகாலை 4 மணி முதல் பூஜைகள் ஆராதனைகள் இடம்பெறும்.

அடியார்கள் வழமைபோல் மாவிளக்கு ஏற்றியும் காவடிகள் எடுத்தும் ஆராதனைகள், பூஜைகளில் கலந்து தங்கள் நேர்த்திக்கடன்களை செய்துகொள்ளலாம்.

12.08.2023 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வேட்டை திருவிழாவும் 13.08.2003 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டப பூசையுடன் பெரிய சப்பரத்திருவிழாவும் நடைபெறும்.

14.08.2023 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 3.30 மணி முதல் அபிஷேக பூசை ஆராதனைகள் நடைபெற்று, காலை 6.30 மணிக்கு வசந்தமண்டப பூசையுடன் ஷண்முகப்பெருமான் உள்விதி வலம் வந்து காலை 9.30 மணிக்கு 45 அடி உயரம் கொண்ட "முக உத்தர தேர்த் திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும். 15.08.2023 செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணி தொடக்கம் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அதிகாலை 4.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடன் அதிகாலை 5 மணிக்கு சுவாமி மாவிட்ட புரத்திலிருந்து புறப்பட்டு கீரிமலை கண்டகி தீர்த்தற்கு எழுத்தருளி நகுலேஸ்வர பெருமானுடன் மாவைக் கந்த பெருமானும் தீர்த்தமாடி, தீர்த்தக்கரை மண்டபத்தில் அடியவர்களுக்கு காட்சி தருவார்.

அன்றையதினம் அடியவர்கள் அனைவரும் கண்ட தீர்த்தத்தில் தீர்த்தமாடி தங்கள் முன்னோர்களுக்கு பித்ருக் கடன் செலுத்தி, இஷ்ட சித்திகளை பெற்று, ஆனந்த பெரு வாழ்வு வாழ ஆசிகூறி, அனைவரையும் அன்போடு. அழைக்கின்றேன்.

அன்றையதினம் மாலை 6 மணிக்கு மாவைக்கந்தன் அலங்கார ரூபமாக காளை மாடு சகிதம் மாவிட்டபுரத்திற்கு எழுந் தருள்வார்.

**மஹாராஜ ஸ்ரீ**
**து.ஷ.இரத்தினசபாபதி குருக்கள்,**
**ஆதீன கர்த்தா-பிரதமகுரு,**
**மாவையாதீனம், மாவிட்டபுரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடத்தப்படாமை ஜனநாயகத்திற்கு விழுந்த பாரிய அடி-மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படாமை ஒரு நாட்டின் ஜனநாயகத்திற்கு விழுந்த பாரிய அடி என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**



இந்த வருடத்தில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஒன்றையாவது நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ள இரண்டு தேர்தல்களில் குறைந்தபட்சம் ஒன்றையாவது எதிர்வரும் செப்டெம்பர் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக ஜனநாயக தினத்திற்கு முன்னதாக நடத்த முடியும் என நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் மக்களின் கட்டுப்பாடின்றி, மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், ஆளுநர்கள், செயலாளர்கள், ஆணையாளர்கள் நடத்தும் இந்த ஆட்சி சட்டத்திற்கு புறம்பானது என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு இதுவரை நாட்டை ஆட்சி செய்த அனைத்து அரசியல் கட்சிகளுமே காரணம் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (நி)

# கொழும்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் பொறியியலாளரும் தாயும் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகனும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கொழும்பு - மகரகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரவூர்தி ஒன்றும், கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் காரில் சென்றவர்கள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைச் செலுத்திச் சென்ற 27 வயதுடைய இளம் பொறியியலாளரும் முன் ஆசனத்தில் அமர்ந்து சென்ற 55 வயதுடைய அவரின் தாயாரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரின் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்ற 58 வயதுடைய தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விபத்தில் பாரவூர்தியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)


## யாழ்ப்பாணம் மாநகரசபை
## நல்லூர் உற்சவ காலத்தில் CCTV கமராக்களை வாடகைக்கு பொருத்துவதற்கான கேள்வி கோரல்-2023

நல்லூர் உற்சவகாலத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை சுற்றியுள்ள நான்கு பக்க வீதிகளில் 32 CCTV(5MP) கமராக்களைக் கொண்ட கமராத் தொகுதியினை வாடகை அடிப்படையில் பொருத்துவதற்கு எமது சபை தீர்மானித்துள்ளது.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 07.08.2023 - 14.08.2023 ஆம் திகதிவரை சபையின் கொள்வனவுப்பகுதியுடன் தொடர்புகொண்டு கேள்விகளுக்குரிய கூறுவிலைப் படிவங்களினைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 14.08.2023 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு முன்னதாக பதிவுத்தபாலிலோ, நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**கேள்வி திறக்கும் -** **திகதி : 14.08.2023**
**நேரம் : முற்பகல் 11.00 மணி.**

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-7004) **07.08.2023.**



# கல்யாணமாலை சர்வதேச இலவச திருமண சேவை
## மணமகள் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 5' 9
தகைமை/தொழில்: ACCA, BSc Assitant Accountant (Pvt)
எதிர்பார்ப்பு: பட்டதாரி. சைவபோசனம்
தொ.இ: B/13847

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5' 9"
தகைமை/தொழில்: A/L HNB
எதிர்பார்ப்பு: உத்தியோகம் உள்ளவர்
தொ.இ: B/13848

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சதயம்
தகைமை/தொழில்: BSc (Agriculture) AI
எதிர்பார்ப்பு: அரச/ தனியார் தொழில்
தொ.இ: B/13850

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 0
உயரம்:5' 7
தகைமை/தொழில்: BSc ,Engineer (கட்டார்)
எதிர்பார்ப்பு: A/L பட்டதாரி
தொ.இ: B/13853

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.ப: 15 1/2
தகைமை/தொழில்: PHARM (Hons) (Own)
எதிர்பார்ப்பு: படித்த பெண். பட்டதாரி
தொ.இ:B/13855

பிறப்பு:1983 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 47
உயரம்:5' 4
தகைமை/தொழில்:QS (UK) ஒப்பந்தகாரர். வியாபாரம்
எதிர்பார்ப்பு: A/L, பட்டதாரி
தொ.இ: B/13856

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: சதயம்
உயரம்:180 Cm
தகைமை/தொழில்: BBA,(Finalyear) (Swiss)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:B/13857

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்:5' 4"
தகைமை/தொழில்: O/L, லண்டன்
எதிர்பார்ப்பு: பிரான்ஸ், லண்டன் PR உள்ளவர், விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ:B/13859

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 17 1/2
தகைமை/தொழில்: A/L நூலக கவனிப்பாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி. ஆசிரியர்.
தொ.இ:B/13862

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
உயரம்: 5' 6
தகைமை/தொழில்: BSc (IT), Softwar Engineer
எதிர்பார்ப்பு: வெளிநாடு. (PR உள்ளவர்கள்)
தொ.இ:B/13865

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.ப: 44 1/2
உயரம்:173 cm
தகைமை/தொழில்:BSc, Do
எதிர்பார்ப்பு: பட்டதாரி. சட்டத்தரணி. வெளிநாடு
தொ.இ: B/13866

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்:178 Cm
தகைமை/தொழில்: Msc in IT, Engineer (London)
எதிர்பார்ப்பு: Doctor, பட்டதாரி
தொ.இ:B/13868

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்:5' 7"
தகைமை/தொழில்: O/L, வியாபாரம்
எதிர்பார்ப்பு: சாதாரண பெண்
தொ.இ:B/13869

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 23 1/2
உயரம்: 5' 9
தகைமை/தொழில்: M.Engineering (civil)
எதிர்பார்ப்பு:Canada (Manager) A/L, அதற்கு மேல்
தொ.இ:B/13871

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்:170 cm
தகைமை/தொழில்:A/L ( Own Business)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13875

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 72
உயரம்: 6' 6
தகைமை/தொழில்: MBA, Superintendent (டுபாய்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:B/13878

கல்யாணமாலை, இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- Kalyanamalai.jaffna@gmail.com. அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை.
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை. பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

34

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### முதலாம் வீரபாகு (1196)

முதலாம் வீரபாகு (1196) பொலன்னறுவை இராச்சியத்தின் மன்னரும் நிஸ்ஸங்க மல்லாவின் மகனும் ஆவார். அவர் தனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு அரியணைக்கு வந்தார். இருப்பினும் ஒரு நாளுக்கு குறைவான காலம் மட்டுமே ஆட்சி செய்ய முடிந்தது. இரவில் முடிசூட்டப்பட்டு அவரது தந்தைக்கு சமமாக இல்லை என்ற காரணத்தால் விடியற்காலையில் கொல்லப்பட்டார்.

### இரண்டாம் விக்ரமபாகு (1196)

இரண்டாம் விக்ரமபாகு (1196) பன்னிரண்டாம் நூற்றாண்டில் பொலன்னறுவையின் மன்னராக இருந்தார். அவர் 1196 இல் முதலாம் வீரபாகு கொல்லப்பட்ட பின் மூன்று மாதங்கள் ஆட்சி செய்தார். இவர் நிஸ்ஸங்க மல்லாவின் இளைய சகோதரர் ஆவார். மேலும் இவர், இவரது சகோதரியின் மகனான மற்றொரு மருமகன் சோடகங்காவால் கொல்லப்பட்டார்.

### சோடகங்கா (1196-1197)

சோடகங்கா பன்னிரண்டாம் நூற்றாண்டில் பொலன்னறுவையின் மன்னராக இருந்தார். அவர் 1196 முதல் 1197 வரை ஆட்சி செய்தார். அவர் தனது மாமா 2 ஆம் விக்ரமபாகு வைத் தொடர்ந்து பொலன்னறுவையின் மன்னராக அபகரித்து ஒன்பது மாதங்கள் ஆட்சி செய்தார். அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு முதலாம் பராக்கிரமபாகுவின் மனைவி லீலாவதி அரசி ஆனார். இராணுவத் தளபதி செனவிரத்தால் அவரது கண்களை இழந்தார்..

சோடகங்கா நிஸ்ஸங்க மல்லாவின் மருமகனும் ஆவார். இவர் காலத்தில் நாணயக் குத்திகள் வெளி யிடப்பட்டன. அதில் ஒன்று வெள்ளி நாணயக் குத்தி. இதன் விட்டம் 20.4 மி.மீ அதன் தடிப்பு 2.5 மி.மீ.இவ் வெள்ளி நாணயத்தில் அவரது பெயர் சிறீ சோடகங்கா என எழுதப்பட்டுள்ளது. இன்னுமொரு நாணயக்குத்தி ஒரு செப்பு மோசா நாணயமாகும்.

சோடகங்கா (1196 – 1197)வெள்ளிநிக்கா நாணயம்
முன்பக்கம் - எழுந்து நிற்கும் அரசன்
பின்பக்கம் –உட்கார்ந்திருக்கும் அரசனும் நாகரி எழுத்தில் பெயரும்



வெள்ளி நாணயக் குத்தியின் விட்டம் 20.4 மி.மீ அதன் தடிப்பு 2.5 மி.மீ.இவ் வெள்ளி நாணயத்தில் அவரது பெயர் சிறீ சோடகங்காதேவா என எழுதப்பட்டுள்ளது.

### விஜயபாகு வம்சம்
### அரசிலீலாவதி (1197-1200)

அரசிலீலாவதி (Queen Lilavati ஆட்சிக் காலம்: 1197-1200, 1209-10, 1211-12) என்பவர் இலங்கை வரலாற்றில் தனது சொந்த உரிமையில் இறையாண்மையாக ஆட்சி செய்த நான்காவது பெண் ஆவார். இவர் பொலன்னறுவை இராச்சியத்தின் அரசரான முதலாம் பராக்கிரமபாகுவின மனைவியாகப் பிரபலமடைந்தார்.

அதாவது இராணியாக 1153 முதல் 1186 வரை இருந்தார். அரச வம்சத்தைச் சேர்ந்த இவர், பராக்கிர மபாகுவின் மரணத்தைத் தொடர்ந்து, பல்வேறு தளபதிகளின் ஆதரவுடன், மூன்று முறை பொலன் னறுவை இராச்சியத்தை ஆட்சி செய்தார். இவரது வாழ்க்கைக் குறிப்புகள் சூளவம்சம் என்ற நூலில் தரப்பட்டுள்ளன.

பாண்டிய வம்சத்தை சேர்ந்த லீலாவதி மன்னர் சிறீவல்பைன், இராணிசுகலா ஆகியோரின் மகளாவர். முதலாம் பராக்கிரமபாகு தக்கிண தேச மன்னரும் லீலாவதியின் மாமாவுமான மனபரணனின் மகன் ஆவார். மனபரணனின் இறப்பின் பின்னர், கீர்த்தி சிறீமேவன் தக்கிணதேசத்தின் மன்னரானார். அதன் பின்னர் மன பரணனின் குடும்பம் சிறீவல்லபனுடன் வாழ்ந்து வந்தது. லீலாவதி பராக்கிரமபாகுவை மணந்து கொண்டார்.

லீலாவதியின் குடும்பத்தில் - குறிப்பாக லீலாவதியின் சகோதரன் (இவனும் மனபரணன் என்றே அழைக்கப்பட்டான், மன பரணன் பராக்கிரமபாகுவின் இரண்டு சகோதரிகளான மித்தா, பிரபாவதி ஆகியோரை மணந்தான்), மற்றும் தாய் சுகலா இருவரும் பராக்கிரமபாகுவுடன் சுமுகமான உறவைக் கொண்டிருக்கவில்லை. மனபரணன் பராக்கிரமபாகுவுடன் சண்டைகளில் ஈடுபட்டான்.

அவள் காலத்தில் நாணயக் குத்திகள் வெளியிடப்பட்டன. அதில் ஒன்று வெள்ளி நாணயக் குத்தி. இதன் விட்டம் 20.5 மி.மீ அதன் தடிப்பு 2.1 மி.மீ.இவ் வெள்ளி நாணயத்தில் அவளது பெயர் சிறீ ராஜ லீலாவதி என எழுதப்பட்டுள்ளது. இன்னுமொரு நாணயக்குத்தி ஒரு செப்பு மோசா நாணயமாகும். இதிலும் அவள் பெயர் எழுதப்பட்டுள்ளது.

லீலாவதி (1197–1200, 1209–10, 1211–12)
ஒருசெப்பு மோசா நாணயம்
முன்பக்கம் - எழுந்து நிற்கும் அரசன்
பின்பக்கம் –உட்கார்ந்திருக்கும் அரசனும் நாகரி எழுத்தில் அரசியின் பெயரும்



ஒருசெப்பு மோசா நாணயக்குத்தியின் விட்டம் 20.47 மி.மீ.இச் செப்பு மோசா நாணயத்தில் அவளது பெயர் சிறீ ராஜ லீலாவதி என எழுதப்பட்டுள்ளது.

### கலிங்கவம்சம்
### சஹஸ்ஸமல்ல (1200-1202)

"சிங்க இதயம் கொண்ட ராஜா" என்றும் அழைக்கப்பட்ட சஹஸ்ஸமல்லபதின் மூன்றாம் நூற்றாண்டில் பொலன்னறுவையின் மன்னராக இருந்தார். இவர் 1200 முதல் 1202 வரை பொலன்னறுவை இராச்சியத்தை ஆட்சி செய்தார். இவர் நிஸ்ஸங்க மல்லாவின் இளைய சகோதரர் ஆவார். லீலாவதி, அவரின் துணை அமைச்சர்களால் அரியணையில் இருந்து அகற்றப்பட்டதை அடுத்து சஹஸ்ஸமல்ல பதவியேற்றார். பின்னர் இவர் ஜெனரல் அயஸ்மந்தாவால் பதவி நீக்கம் செய்யப்பட்டு, கல்யாணவதி பதவிக்கு வந்தார்.

சஹஸ்ஸமல்ல (1200-1202)
ஒருசெப்பு மோசா நாணயம்
முன்பக்கம் - எழுந்து நிற்கும் அரசன்
பின்பக்கம் –உட்கார்ந்திருக்கும் அரசனும் நாகரி எழுத்தில் பெயரும்



ஒருசெப்பு மோசா நாணயக்குத்தியின் விட்டம் 20.47 மி.மீ.இச் செப்பு மோசா நாணயத்தில் அவளது பெயர் சிறீமத் சஹஸ்ஸமல்லஎன எழுதப்பட்டுள்ளது.

### கல்யாணவதி (1202-1208)

கல்யாணவதி நிஸ்ஸங்க மல்லாவின் மனைவி ஆவார். இவர் 1202 முதல் 1208 வரைபொலன்னறுவையின் ராணியாக இருந்தார். இலங்கையில் ஆட்சிசெய்த சில ராணிகளில் இவரும் ஒருவர். இவர் 1196 இல் விதவையானார். இவர் சஹஸ்ஸமல்லாவுக்குப் பிறகு பொலன்னறுவையின் ராணியாக பதவியேற்றார். 1202 இல், படைத்தலைவரான அயஸ்மந்தா, மன்னன் சஹஸ்ஸமல்லாவை பதவி நீக்கம் செய்து, அவருக்குப் பதிலாக அரசி கல்யாணவதியை அரியணையில் அமர்த்தினார். அவரது ஆட்சி அமைதியான ஆட்சி என்று வர்ணிக்கப்படுகிறது.

அவளுக்குப் பிறகு மூன்று வயது மன்னன் தர்மசோக ஆட்சிக்கு வந்தான். அவளுடைய ஆட்சி எப்படி முடிவடைந்தது என்று தெரியவில்லை, ஆனால் அவள் பதவிநீக்கம் செய்யப்பட்டாள் என்றுகருதப்படுகிறது:

### தர்மசோக (1208-1209)

1208 முதல் 1209 வரை ஆட்சி செய்த பதின் மூன்றாம் நூற்றாண்டில் பொலன்னறுவையின் குழந்தைப் பருவ மன்னராக இருந்த தர்மசோகர் மூன்று மாத வயதுடையவராக இருந்தார். அவர் பொலன்னறுவையின் மன்னராக கல்யாணவதிகுப் பிறகுதளபதி அயஸ்மந்தவால் நியமிக்கப்பட்டு அவரின் கீழ் ஒரு வருடம் ஆட்சி செய்தார். அதன் பின்னர் தர்மசோகரது தந்தை அனிகங்கா ஆட்சிக்கு வந்தார்.

தர்மசோக தேவா (1208-1209)
1/8 செப்பு மோசா நாணயம்
முன்பக்கம் - எழுந்து நிற்கும் அரசன்
பின்பக்கம் –நாகரி எழுத்தில் குழந்தையின் பெயர்



1/8 செப்பு மோசா நாணயக்குத்தியின் விட்டம் 9.8 மி.மீ. இச் செப்பு (1/8) மோசா நாணயத்தில் அக் குழந்தையின் பெயர் சிறீ தர்மசோக தேவா என எழுதப்பட்டுள்ளது.



1/8 செப்பு மோசா நாணயக்குத்தியின் விட்டம் 10.9 மி.மீ. தடிப்பு 1.3 மி.மீ. இச் செப்பு (1/8) மோசா நாணயத்தில் அக் குழந்தையின் பெயர் சிறீ தர்மசோக தேவா என எழுதப்பட்டுள்ளது.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே தவணை பரீட்சை

## கல்வி அமைச்சர்



(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு முதல் அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே தவணை பரீட்சை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

இத்தீர்மானம் தரம் 1 முதல் உயர்தரம் வரை அதாவது தரம் 13 வரை ஒவ்வொரு பாடசாலையிலும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இதுவரை ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒரு வருடத்தில் மூன்று தவணை பரீட்சைகள் நடத்தப்பட்டு வந்தன.

ஒவ்வொரு பாடத்திலும் கற்பிக்கப்படும் பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு தவணையின் முடிவிலும் ஒரு தேர்வு நடத்தப்பட்டது.

ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் அந்தந்த தரத்தில் அவர்களின் நிலை ஆகியவையும் அறியப்பட்டன.

ஒரு தவணை பரீட்சையின் முடிவில், மாணவர்களுக்கு விடுமுறை கிடைத்தது, அந்த விடுமுறையின் போது மாணவர்கள் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ளும் வாய்ப்பும் கிடைத்திருந்தது.

ஆண்டு இறுதித் தேர்வு முடிந்ததும் பள்ளி விடுமுறைக்குப் பிறகு மாணவர்களை புதிய தரத்திற்கு உயர்த்தும் பணியை பள்ளி அமைப்பு இதுவரை பேணப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கான பாடத்திட்டம் மற்றும் பாடசாலையின் சுமையை குறைக்கும் வகையில் வருடத்திற்கு ஒரு முறை தவணைப் பரீட்சை நடத்துவதற்கு கல்வி அமைச்சர் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# இரண்டு வருடங்களின் பின் முகமூடி கொள்ளை சந்தேகநபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொள்ளையிட்ட முகமூடி கொள்ளை சந்தேகநபர்கள் பருத்தித்துறை பொலிஸாரினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யுப்பட்டுள்ளனர்.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி அல்வாய் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த மூன்று பேர் கொண்ட முகமூடி கொள்ளை கும்பல், நகை, பணம் மற்றும் தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்து சென்று இருந்தது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

சந்தேக நபர்கள் தலைமறைவாகி இருந்த நிலையில், சுமார் 2 வருட கால பகுதிக்கு பின்னர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இருவரை கைது செய்துள்ளனர்.

மேலும் ஒரு சந்தேகநபர் தொடர்ந்தும் தலைமறைவாக உள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார், கைது செய்யப்பட்ட நபர்களை விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர். (நி-33)

# சாரதிகளுக்கு 'ஆப்பு' வருகிறது புதிய செயலி

(கொழும்பு)

சாரதிகள் செய்யும் தவறுகளை தெரிவிப்பதற்காக விசேட செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அதன் மூலம் சாரதிகள் செய்யும் தவறுகளை நேரடியாக பயணிகள் முன்வைக்க முடியும் என விபத்து விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை சாரதிகள் செய்யும் தவறுகளை ஆவணப்படுத்தும் வகையில் சாரதியின் சோதனை புத்தகத்தை அறிமுகப் படுத்தவும் இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சுமார் 218 பேருந்து விபத்துக்கள் இந்த வருடத்தில் இடம்பெற்றுள்ளன. இதில் 19 பேர் உயிரிழந்துள்ளதாக எரந்த பெரேரா குறிப்பிட்டுள்ளார். (நி)

# இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் இடைநிறுத்தம் மூடப்படும் நிலையில் பேக்கரிகள்

## அகில இலங்கை பேக்கரி சங்கம்

(கொழும்பு)

பேக்கரி தொழிலுக்காக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், மீண்டும் தொழில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் விநியோகம் செய்யப்பட்டதன் காரணமாகவே உற்பத்திப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

மேலும் தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு பேக்கரி பொருட்களுக்கு உள்ளூர் முட்டைகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை தமது தொழிலுக்காக விடுவிப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2883

கபிலா




கலா




தருண்




விஜி




மிருஷாலி




கவிந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெள்ளரியும் அதன் மருத்துவ பண்புகளும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name -
Cucumis sativus
Family- Cucurbitaceae
English Name: Cucumber
Sinhala Name -Pipinha.

உரோமங்களை உடையதும் சராசரி பருமனுடையதுமான ஒரு கொடித் தாவரமாகும் தனியிலை ஒன்றுவிட்ட இலையமைப்பைக் கொண்டவை 11 தொடக்கம் 16 cm நீளமும் 14 cm அகலமும் கொண்ட கோள வடிவ. இருதய வடிவ கூரிய முனைகளையுடைய இலைகளினைக் கொண்டது.

இலையின் இரு பக்கங்களும் சுனைகளையுடையது. இலைக்காம்பு 5 தொடக்கம் 8 cm நீளமுடையது. பூக்கள் ஒரு பாலானவை பிரகாசமான மஞ்சள் நிறம் கொண்டவை நீள்வட்ட வடிவான பெரிய பழங்களை தரும். விதைகள் தட்டையாக வெள்ளை நிறமானவை. இவ் விதைகள் கிட்டதட்ட 6 மி.மீ நீளமானவை.

யாழ்.மாவட்டத்தில் தோட்டப்பயிராக பயிரிடப்படுகிறது. தை முதல் சித்திரை மாத காலப்பகுதியில் இனவிருத்தி செய்யப்படுகிறது. எமது பிரதேச பருவகாலத்தை . நோக்கும் போது பனிக் காலமும் மழைக் கால்மும் அதிக அளவில் வெயில் காலமும் காணப்படுகிறது. இளவேனில், முதுவேனில் காலங்களில் அதிகளவு உஷ்ணமும் வரட்சியும் காணப்படும் எனவே நோய்கள், உடல் வறட்சி, கை கால்வலி, அம்மைக் கொப்பளங்கள் போன்றவை அதிகமாகக் காணப்படும்.

இக்காலத்தில் குளிர்ச்சியை ஏற்படுத்தக் கூடியவற்றைப் பயன்படுத்த வேண்டும். அதாவது உடலிலுள்ள பசித்தீயை சாந்தமாக்கி உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கும் உணவுகளையும், மூலிகைகளையும் பயன்படுத்த வேண்டும்.

இதில் வெள்ளரிப்பழம், வெள்ளரிப்பிஞ்சு என்பன இப் பருவ காலங்களிலே கிடைக்க கூடியதாக இருக்கும். வெள்ளரியானது பித்தப்பையில் வரும் கற்கள், பித்தப்பை சம்பந்தமான கோளாறு உடையவர்களுக்கு சிறந்த பலனைக் கொடுக்கும். நாவரட்சி, தாகம், உடற்சூடு, பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல், சிறுநீர்த்தாரை அழற்சி, சிறுநீரககற்கள், என்பு சம்பந்தமான பிரச்சினை உடையவர்கள் தாராளமாகப் பயன்படுத்த சிறந்த பலனைக் கொடுக்கும். இயற்கையான முறையில் என்புகளைப் பலப்படுத்தவும் சிறந்தது.

செரிமானத்தை சீராக்கும். மலச்சிக்கலை நீக்கக் கூடியது வரட்டு இருமலுக்கும் வெள்ளரிப்பழம் சிறந்தது. வெள்ளரி விதைகள் சிறுநீரகக் கற்களைக் கரைத்து சிறுநீர் தொற்றை நீக்கி சிறுநீரை நன்கு வெளியேற்றக் கூடியது. கண்ணுக்கு குளிர்ச்சியை தரும்.

வெள்ளரிப்பழங்களைப் பிரிக்கும் போது நிறைய விதைகள் பழச்சதையுடன் ஒட்டி இருக்கும். இவ்விதைகளை 2, 3 தடவை நீரில் நன்கு கழுவி ஒருநாள் முழுக்க வெயிலில் உலரவிட வேண்டும். நன்கு உலர்ந்த பின் பின்பு விதை உறைகளை தட்டி நீக்கி விதைக்குள். இருக்கும் பருப்புக்களைச் சேகரித்து வைத்துப் பயன்படுத்தலாம்.

வெள்ளரிப்பிஞ்சுக்கு வாத, பித்த, கபமுக்குற்றங்களும். நீங்கும். காய், பழத்தால் தினவு, சொறி, நீர்சுருக்கு, கரப்பான் நீங்கும். இதை உணவு உண்ட பின் உண்ணப் பசியுண்டாகும். விதையால் சுருக்கின்ற நீரடைப்பு கல்லடைப்பு, சதையடைப்பு வெள்ளை நேர் எரிச்சல் இவை போம் .

**பிஞ்சு**

"பிஞ்சு வெள்ள ரிக்காய்க்குப்
பேசு திரிதோடம் போம்
வஞ்சியரே! முற்றிய காய்
வாதமுமாம் - நைஞ்சகனி
உண் டாற் சயித்தியமாம்
உள்ளிருக்கும் அவ்விதையைக்
கண்டாலும் நீறிறங்கும் காண்"

**காய்**

"உண்டருந்தத் தீஎழும்பும்
உண் மருந்தை நான் முடுக்கும்
கண்ட கரப்பானைக் கடுக்குங்காண் - பண்டிதரே
உள்ளரிப்பை நீர்க்கடுப்பை
ஊரை விடுத் தோட்டி விடும்.
வெள்ளரிக்காயின் குண
வித்தை விள் "

**விதை**

"கடுப்பொடு நீர்க்கட்டு வெறுங்
கல்லடைப்பு தாரை வெடிப்பு
சதையடைப்பு மேகம் -
எடுத்துரைக்க
உள்ளரிவி என்னுமுறை
கிரிச்சர மிலைகள் வெள்ளரி
விதைக்கேகும் விள்"

பிஞ்சு, காய், இலைகளை பச்சையாகவே உண்ணலாம் உடல் வெப்பம் மாறும் நீர் வேட்கை தணியும்.

300 கிராம் உரிக்காத பழத்திலுள்ள போசணைக் கூறுகள் கலோரி - 45,கொழுப்பு-0, காபோவைதரேற்று - 11 கிராம், புரதம் 2 கிராம், நார்ச்சத்து- 2 கிராம் ,ஈரலிப்பு 96% . உயிர்ச்சத்து C - 14% உயிர்ச்சத்து k -62% மக்னீசியம் 10%, பொட்டாசியம் 13%, மங்கனீஸ் 12 %.

வெள்ளரிப்பழமானது குறைந்த கலோரியையும் அதிக அளவிலான உயிர்ச் சத்துக்கள், கனிமங்களை கொண்டது . வெள்ளரிப்பிஞ்சை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி தயிர்ப் பச்சடியில் சேர்த்தோ மோரில் போட்டு தாளித்தோ அருந்தலாம் அல்லது சிறு சிறு துண்டுகளுடன் உப்பு, மிளகாய்ப்பொடி சேர்த்து உண்ணலாம். இதனால் சிறுநீர் எரிச்சல், அப்பகுதியில் ஏற்படும் அரிப்பு தீரும்.

வெள்ளரிப்பழங்களை தோல் சீவி தேவையான அளவு சீனிசேர்த்து மிக்ஸியில் அடித்து தேவையானால் குளிரூட்டியில் வைத்தும் அருந்தலாம் அல்லது பழத்தை பிரித்து விதைகளை நீக்கி சர்க்கரை சேர்த்தும் சாப்பிடலாம்.

வெள்ளரிப்பழங்களை தோல் நீக்கி விதைகளையும் நீக்கி பழங்களை சுத்தமாக கைகளால் பிசைந்து பசுப்பாலை நன்கு காய்ச்சி அதனுள் பிசைத்த பழங்களையும் தேவையான அளவு சீனியையும் சேர்ந்து கலந்து ஆறவிட்டு பருகவும். இப் பானத்தை அருந்திவர இரத்தத்திலுள்ள உஷ்ணத்தை குளிர்மையாக்கும். மலச்சிக்கலை நீக்கும். இதன் சாறு வயிற்றுப்புண்ணை ஆற்றல்லது. இப்பழத்தில் நீர்ச்சத்து 96% உள்ளதால் வயிற்றெரிச்சலை உடனடியாக குணமாக்க வல்லது.

நன்றாக பழுத்த வெள்ளரிப்பழத்திலிருக்கும் சதைப்பகுதியை விதைகளை நீக்கி பிரித்தெடுத்து அதன் சாற்றை சிறிது உப்பும் மோரும் கலந்து அருந்த தாகம் தணிந்து புத்துணர்ச்சி உண்டாகும் சிறுநீர் நன்கு கழியும்.

பேரிச்சம்பழத்தையும், வெள்ளரிப் பழத்தையும் சேர்த்து கலந்து உண்பதால் மருத்துவ குணமிக்க கலவையாகும். பேரிச்சம்பழம் உடலில் உஷ்ணத்தை உண்டு பண்ணும். வெள்ளரிப்பழம் குளிர்மையைத் தரும் இரண்டையும் சேர்த்துண்ண அனைவருக்கும் ஏற்ற உணவாக அமையும். மருந்தாகவும் மாறிவிடுகிறது.

வாதுமைப்பருப்பு, வெள்ளரி விதைப்பருப்புகளை சூடான பாலில் போட்டு உறவைத்து தேன் சேர்த்து இளஞ்சூடான பதத்தில் அருந்த வேண்டும் உடல் பலவீனத்திற்கு சிறந்த பானமாகும்.

**வெள்ளரிப்பாயாசம் -**

வெள்ளரிப்பழத்தை தோல் சீவி விதை நீக்கி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வைக்கவும் ஒரு கப் பச்சரிசியை ஊற வைத்து வடித்து வெள்ளரிதுண்டுகளுடன் சேர்த்து ஒன்றாக அரைத்து எடுக்கவும். ஒரு வாணலியை அடுப்பேற்றி சீனியும் நீரும் சேர்த்து பாகாகக் காய்ச்சி எடுக்கவும்.

பிறம்பான ஒரு வாணலியில் சிறிது நெய்விட்டு அதில் சிறிது சிறிதாக சொட்டாக வெட்டிய தேங்காயை வறுத்தெடுக்கவும்.இதனுடன் முந்திரிகை வற்றல் சேர்த்து வறுத்து வைக்கவும். பின்பு ஒரு பாத்திரத்தில் சிறிது நீர் விட்டு அரைத்துள்ள வெள்ளரி கலவையைப் போட்டு அடுப்பேற்றி கலக்கிக கொண்டு வர அதனுடன் பாகை கூட முந்திரிகை வற்றல், தேங்காய் சொட்டையும் சேர்த்து கொதிக்க வைத்து ஏலப்பொடி சேர்த்து பாயாசமாகத் தயாரித்து பருகவும். உடற்சூட்டைத் தணித்து தேக பலத்தை அதிகரிக்கும்.

**வெள்ளரிப்பழ கேக்-**

6 துண்டு வெள்ளரிப்பழம், 8 பேரிச்சம்பழம், 20 வாதாம் பருப்பு, 4 மேசைக்கரண்டி கறுப்பு திராட்சைப்பழம், 1கப் சீனி, 350 கிராம் கோதுமை மா.

வெள்ளரிப்பழத்தை மிக்ஸியில் போட்டு அரைத்து வைத்துக் கொள்ளவும். பேரிச்சம்பழம், வாதாம்பருப்பு திராட்சைப்பழம் எல்லாவற்றையும் வெட்டி ஒரு மேசைக் கரண்டி கோதுமை மா சேர்த்து நன்கு கலந்து வைத்துக் கொண்டு பின்பு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து கோதுமை மா, பட்டர் தேவையான சீனி சேர்த்து நன்கு. அரைக்கவும் நன்கு அடித்து கொண்டு வரும் போது தயிரும் (சிறிதளவு) சேர்த்து சிறிதளவு வனிலாவும் சேர்க்கவும் பின் பேக் பண்ணி எடுக்கவும் குழந்தைகட்கு சிறந்த ஆரோக்கியமான சிற்றுண்டியாகும்

வெள்ளரி விதைகளைப் பிரித்து உள்ளிருக்கும். பருப்பை வெற்றிலை பாக்கு கலவையில் சேர்த்து உண்டாஸ் குளிர்ச்சியை தரும். சமிபாட்டைத் தூண்டும் இரத்தத்தை சுத்தப்படுத்தும் நீர்க்கடுப்பு நீங்கும்.

உடலில் வயிற்றோட்டம், வாந்தி போன்ற நிலைமைகள் ஏற்பட்டு உடலில் நீர்ச்சத்து குறையும் போது வெள்ளரிக்காய்ச் சாறும் இளநீரும் சம அளவு கலந்து 2 மணி நேரத்திற்கு ஒருதடவை 60 மில்லி வரை அருந்தலாம். தோல் தொற்றுக்கள் ஏற்பட்டால் வெள்ளரிக்காய்ச் சாறு, அறுகம்புல் சாறு, கரட்சாறு மூன்றையும் சமஅளவு கலந்து தினமும் ஒரு வேளை குடித்து வரலாம்.

35 கிராம் விதைகளை நன்றாக அரைத்து 175 மில்லி நீரில் கரைத்து வடிகட்டி 30 மில்லி அளவு தினமும் 3 வேளை குடிக்க சிறுநீரகக் கற்கள் கரைந்து சிறுநீர் நன்கு வெளியேறும் தொடர்ந்து 40 நாட்கள் இவ்வாறு பயன்படுத்திவரலாம்.

வெள்ளரிக்காயை அரைத்து அதைத் தினமும் முகத்தின் மீது பூசிவந்தால் முகத் தோலின் வறட்சி நீங்கும் முகப்பருக்கள் வராமலும் தடுக்கும். முகம் பளபளப்பாக அமையும்.

**வெள்ளரிப்பழக் கூட்டு -**

கடலைபருப்பு - தேவையான அளவு, வெள்ளரிப்பழம் - சிறுசிறு துண்டுகளாக வெட்டி எடுக்கவும் கடலைப்பருப்பை நன்கு 2 மணி நேரம் நீரில் உறவிட்டு சட்டியை அடுப்பேற்றி நீர்விட்டு கொதித்துவர கடலைப் பருப்பைப் போட்டு நன்கு வெந்ததும் வெட்டிய வெள்ளரிப் பழத்துண்டுகளையும் போட்டு கொதிக்க விட்டு நன்கு வெந்து வர மஞ்சள் தூள், உப்பு, மிளகாய்த்தூள் சேர்த்து அவித்து இறக்கி வைத்துக் கொண்டு ஒரு வாணலியில் சிறிது நல்லெண்ணெய் விட்டு கடுகு, கறிவேப்பிலை செத்தல் மிளகாய், வெங்காயம், பெருஞ்சீரகம் போட்டு தாளித்து பின்பு வடித்து மேற் கூறிய அவியலில் கலந்து கூட்டாக சாதத்துடன் சேர்த்து சாப்பிட்டு வர ஜீரண மண்டலம் பலப்படுவதோடு எமது சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்ற உணவு மாகும்.

**குறிப்பு :- வெள்ளரிப் பழம் கிடைக்கும் காலங்களில் ஏதோ ஒரு முறையில் நாம் கட்டாயமாக உணவாகவோ, மருந்தாகவோ பயன்படுத்தல் ஆரோக்கியத்திற்கு உகந்ததாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளிக்குடா இறங்குதுறை ஆழப்படுத்தி தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் அதிகளவான கடற்தொழிலாளர்களைக் கொண்ட பள்ளிக்குடா பகுதியில் உரிய இறங்குதுறை வசதிகளின்மையால் சுமார் 460க்கும் மேற்பட்ட கடற் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அதிகளவான கடற்தொழிலாளர்களைக் கொண்ட பகுதியாக பூநகரி பள்ளிக்குடா பிரதேசம் காணப்படுகிறது.

குறித்த பகுதியில் சுமார் 460 வரையான தொழிலாளர்கள் 300 க்கும் மேற்பட்ட படகுகளை பயன்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் உரிய இறங்கு துறை வசதிகள் இன்மையால் மேற்படி தொழிலாளர்கள் தமது படகுகள் மற்றும் இயந்திரங்களை தொழில்களுக்கு கொண்டு செல்வதிலும் தொழிலுக்கு சென்று திரும்புவதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு குறித்த பகுதியில் இறங்கு துறையை ஆழப்படுத்தி புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அவை இடை நடுவில் கைவிடப்பட்டதாகவும் குறித்த பகுதி கடற் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளதுடன் நாளாந்தம் தொழில் மூலம் கிடைக்கும் வருமானம் குறைவாக இருந்தும் உரிய இறங்கு துறை வசதிகள் இன்மை காரணமாக இயந்திரங்கள், படகுகள் தொடர்ச்சியாக சேதமடைந்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தமக்கான இறங்கு துறைகளை உரியவாறு ஆழப்படுத்தி புனரமைத்து தருமாறும் தமது கடற் கரையோரப் பகுதிகளை கடல் அரிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக ஏற்ற வகையில் தடுப்புச் சுவர்களை அமைத்து தருமாறும் குறித்த பகுதி கடற் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-315)

# 1800 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்படவுள்ள தலைமன்னார் துறைமுகம்

## கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சு திட்டம்



(கொழும்பு)

37 ஆண்டுகளுக்குப்பிறகு இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து பயணிகள் கப்பல்கள் வந்து செல்வதற்கு வசதியாக தலைமன்னார் துறைமுகத்தை மீண்டும் அமைக்க துறைமுகங்கள் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

வடக்கில் இடம்பெற்ற மோதல்களின் போது இந்த துறைமுகம் அழிக்கப்பட்டதுடன்,கைவிடப்பட்டது. இதன்படி, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் பணிப்புரையின் கீழ், கப்பலை மீள நிர்மாணிக்கும் பொறுப்பு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

முதலீட்டின் மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 1,800 மில்லியன். துறைமுகத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு இணையாக, துறை முகத்தின் எல்லையில் உள்ள அரசுக்குச் சொந்தமான சுமார் 10 ஏக்கர் நிலம் துறைமுக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக கையகப்படுத்தப்படும்.

இந்த புதிய அபிவிருத்திகளின் கீழ், நவீன பயணிகள் முனையம் மற்றும் கிடங்கு வசதிகள் கட்டப்படும். தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் படகுச் சேவை ஆரம்பிக்கப்படுவதன் மூலம் இலங்கை யாத்ரீகர்கள் இந்தியாவுக்குச் செல்வதற்கும் குறைந்த கட்டணத்தில் பயண வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வசதியாக அமையும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த நடவடிக்கைகள் இரு நாடுகளுக்கு மிடையிலான சரக்கு பரிமாற்றத்தை எளிதாக்குவதுடன், வட இலங்கை மக்களின் உற்பத்திகளை இந்தியாவில் பிரபலப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

மன்னார் ஈச்சளவக்கை குழந்தை யேசு ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது. திருவிழா திருப்பலி வழிபாடுகள் அருட்தந்தை லேபோன்சுதன் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.
(படம்- யதுபாஸ்கரன்)



# குறுந்தூர சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அதிக கட்டணங்களை அறவிடுவதாக முறைப்பாடு

(கண்டாவளை)

கிளிநொச்சி,பரந்தன், முறிகண்டி குறுந்தூர சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் பயணிகளிடம் அதிக கட்டணம் அறவிடப்படுவதுடன் பணத்திற்கான பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுவதில்லை என பயணிகள் மற்றும் பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதாவது ஏ-9 வீதியின் முறிகண்டி முதல் பரந்தன் வரைக்குமான 16 கிலோமீற்றர் தூரத்திற்கும் 96 ரூபா அறவிட வேண்டிய நிலையில் 120 ரூபாய் முதல் 140 ரூபாய் வரை அறவிடப்பட்டு வருகின்றது.

இதேபோன்று டிப்போ சந்தியிலிருந்து பரந்தன் சந்தி வரைக்குமான கட்டணமாக 59 ரூபா அறவிட வேண்டிய நிலையில் 80 முதல் 100 ரூபாய் வரை பயணத்துக்கான கட்டணங்களாக அறவிடப்படுகின்றது.

இவ்வாறு அதிக தொகையான பணத்தை அறவிடுவது தொடர்பில் உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பாடசாலை மாணவர்களிடமும் இவ்வாறு அதிக பணம் அறவிடப்படுவதாகவும் மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

பரந்தன் இந்து மகா வித்தியாலயம், கிளிநொச்சி புனித பெண்கள் திரேசா கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி, சிவபாத கலையகம் ஆகிய பாடசாலைகளுக்கு செல்லும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த குருந்தூர சேவை களிலேயே பாடசாலைகளுக்கு சென்று வருகின்றனர்.

இது தொடர்பில் உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-315)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 400 | 450 |
| தக்காளி | 250 | 300 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 220 | 320 |
| கோவா | 200 | 220 | 280 | 300 |
| கரட் | 250 | 540 | 540 | 550 |
| பூசணி | 100 | 120 | 100 | 140 |
| புடோல் | 80 | 60 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 150 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 350 |
| வெண்டக்காய் | 120 | 80 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 160 | 200 |
| பயற்றங்காய் | 100 | 180 | 120 | 150 |
| லீக்ஸ் | 200 | 220 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 200 | 180 | 200 |
| கறிமிளகாய் | 300 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 300 | 300 |
| போஞ்சி | 450 | 450 | 480 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | — | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 250 | 250 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 120 | 200 | 200 | 320 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 40 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 200 | 50 | 100 |



கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த மகோற்சவ கொடியேற்ற நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. (நி-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 249





இப்போதும் அவன் ஓடியிருக்கலாம் என்று சந்தேகித்து, படைகளைப் பிரித்து நாலாபுறமும் அனுப்பினோம்.

"வைகை நதியின் இரு கரைகளோடு நீங்கள் எல்லோரும் விரைந்து சென்றீர்கள். நானும் சும்மா இருக்கவில்லை. வைகை நதியில் இறங்கி மணலில் நடந்து தெற்கே சென்றேன். ஒரு தனிக் குதிரையின் குளம்படி மணலில் சில இடங்களில் பதிந்திருந்தது. குதிரை போன வழியில் மணலில் இரத்தக் கறையும் காணப்பட்டது. அதைப் பிடித்துக் கொண்டு நான் போனேன். வைகையாற்றின் மத்தியில் ஒரு தீவு போல் அமைந்திருந்த சோலையை அடைந்தேன். அந்தச் சோலைக் குள்ளே திருமாலின் கோவில் ஒன்றிருந்தது.

அதையொட்டி இரண்டொரு அர்ச்சகர் வீடுகள் இருந்தன. பெருமாள் பூஜைக்குரிய பூமரங்கள் அச்சோலையில் ஏராளமாக இருந்தன. ஒரு சிறிய தாமரைக் குளம் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. நண்பா! உனக்கு ஒரு வேளை ஞாபகம் இருக்கலாம். அந்தச் சோலையைச் சுட்டிக்காட்டி அதில் நம் வீரர்கள் யாரும் தப்பித் தவறிக் கூடப் பிரவேசிக்கக் கூடாது என்று நான் கண்டிப்பான கட்டளை 'யிட்டிருந்தேன். இதற்குக் காரணம், அந்தப் பெருமாள் கோவிலின் பூஜைக்குப் பங்கம் எதுவும் வரக்கூடாது என்று நான் எண்ணியது மாத்திரம் அல்ல. அங்கே இருந்த பட்டரின் வீட்டில் என் உள்ளத்தைக் கவர்ந்து என் நெஞ்சில் கோவில் கொண்ட பெண்ணரசி இருந்ததுதான்."

"ஒருநாள் அந்தச் சோலைக்குள் நான் புகுந்தபோது நந்தினியைப் பார்த்து விட்டேன். அவளுடைய கோலம் இப்போது சிறிது மாறிப் போயிருந்தது. தலைக் கூந்தலை ஆண்டாள் விக்கிரகத்தைப் போல் முன்னால் மகுடமாகக் கட்டி அதில் பூமாலை சுற்றியிருந்தாள். கழுத்திலும் பூமாலை தரித்திருந்தாள். 'இது என்ன கோலம்?' என்று நான் கேட்டேன்.

அவள் என்னைப் பிரிந்து வந்த பிறகு மானிடர் யாரையும் மணப் பதில்லை என்றும் ஆண்டாளைப் போல கண்ணனையே மணப்பது என்றும் சங்கல்பம் செய்து கொண்டதாகக் கூறினாள். இது வெறும்பைத்தியக்காரத் தனமாக எனக்குத் தோன்றியது. மானிடப் பெண்ணாவது, கடவுளை மணப்பதாவது? ஆயினும் அதைப் பற்றி அச்சமயம் விவகாரம் செய்ய நான் விரும்பவில்லை. 'யுத்தம் முடியட்டும் பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று எண்ணினேன். அவளுக்கு ஏதேனும் உதவி வேண்டுமா என்று கேட்டேன். 'உங்கள் போர் வீரர்கள் யாரும் இங்கு வராதபடி செய்யுங்கள். இங்கே என் வயதான தாய் தந்தையர் மட்டுந்தான் இருக்கிறார்கள். அவர்கள் கண் தெரியாதவர்கள். திடகாத்திரனான என் தமையன் ஒருவன் உண்டு.

அவன் இப்போது திருப்பதி யாத்திரை போயிருக்கிறான்!' என்றாள். அவள் கேட்டபடி அங்கே நம் வீரர் யாரும் வராமல் பார்த்துக் கொள்வதாக நான் வாக்குறுதி கொடுத்துவிட்டுத் திரும்பினேன். அப்புறம் இரண்டு மூன்று தடவை அவளைப் போய்ப் பார்த்தேன். அவளிடத்தில் நான் கொண்ட பழைய மோகம் ஒன்றுக்குப் பத்து மடங்கு பெருகிக் கொழுந்துவிட்டெரிந்தது. எனினும் பொறுமையைக் கடைப்பிடித்தேன் வந்த காரியத்தை முதலில் முடிக்க வேண்டும். வீரபாண்டியனுடைய தலையுடன் பழையாறைக்குப் போக வேண்டும் அதற்குப் பிரதியாக நந்தினியை மணந்து கொள்ளத் தந்தையிடம் அனுமதி கேட்பது என்று முடிவு செய்தேன்.

"இப்படி நான் தீர்மானித்திருந்த நிலையில், ஒற்றைக் குதிரையின் குளம்படி அந்தச் சோலைக்குள்ளே போயிருப்பதைக் கண்டதும் அளவிலாத வியப்பும் ஆத்திரமும் கொண்டேன். மேலும் சென்று பார்த்த போது, அடர்ந்த மரங்களின் மறைவில் குதிரை கட்டியிருப்பதைக் கண்டேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கோழிக்குஞ்சு!



(நேற்றைய தொடர்ச்சி)

செவலைக் கோழிக்குக் கவலையாக இருந்தது. இப்படி அலட்சியமாக இருக்கே இந்தச் சாம்பல் நிறக்குஞ்சு என்று.

செவலைக் கோழி குஞ்சுகளுக்கு ஒவ்வொரு நாளும் புதிய புதிய பாடங்களைக் கற்றுக் கொடுத்தது.

கறுப்பு நிறக்குஞ்சு அம்மா சொன்னதைக் கேட்டது வெள்ளை நிறக்குஞ்சு அம்மா சொன்னதைக் கேட்டது செவலைக் குஞ்சு அம்மா சொன்னதைக் கேட்டது கறுப்பு வெள்ளைக்குஞ்சு அம்மா சொன்னதைக் கேட்டது

வெள்ளைக்கறுப்புக்குஞ்சு அம்மா சொன்னதைக் கேட்டது செவலைக் கறுப்புக்குஞ்சு அம்மா சொன்னதைக் கேட்டது சாம்பல் குஞ்சு மட்டும் அம்மா சொன்னதைக் கேட்கவில்லை சாம்பல் குஞ்சு கண்டபடி அலைந்து திரிந்தது. இரை தேடியது.

அன்று காலை செவலைக் கோழியும் குஞ்சுகளும் இரை தேடி குப்பை மேட்டைக் கிண்டிக் கொண்டிருந்தன. மேலே வானத்தில் பருந்து தன் நீண்ட சிறகுகளை விரித்துப் பறந்து கொண்டிருந்தது. அந்தப் பருந்தின் நிழல் கீழே பூமியில் விழுந்ததைப் பார்த்து செவலைக்கோழி.

உடனே செவலைக் கோழி, கேக் கேக் கேக்கே என்று அபாய எச்சரிக்கையை எழுப்பியது. உடனே எல்லாக் குஞ்சுகளும் அங்கங்கே கிடைத்த புதர்களுக்குள் பதுங்கிக் கொண்டன. செவலைக் கோழி சாம்பல் குஞ்சைத் தேடியது காணவில்லை. சில நொடிகளுக்கு அப்புறம் சாம்பல் குஞ்சு ஒரு செடியின் மறைவிலிருந்து ஹாயாக கிய்கிய்யா கிய்கிய்யா கிய்கிய்யா என்று பாடிக் கொண்டே வெளியில் வந்தது. அது என்ன என்று நிமிர்ந்து பார்ப்பதற்குள் சாம்பல் குஞ்சின் மீது பருந்தின் நிழல் விழுந்தது. ஆ...ஐயோ... ஆபத்துத் வந்து விட்டதே! பருந்தின் இறகுச்சத்தம் சாம்பல் குஞ்சின் காதில் கேட்டது.

அவ்வளவு தான் உயிர் போகப் போகிறது. இதோ பருந்தின் கால்களில் உள்ள கூர் நகங்கள் உடலைக் கிழிக்கப் போகின்றன. என்ன செய்வது என்று சாம்பல் குஞ்சுக்குத் தெரியவில்லை. அப்படியே கண்களை மூடி உட்கார்ந்து விட்டது. கிய்யா கிய்யா கிய்யா ... அப்போது ஆவே சமாய் செவலைக் கோழி பறந்து வந்து பருந்தின் மீது மோதியது. பருந்து நிலைதடுமாறி கீழே விழுந்து புரண்டது. என்ன நடந்தது என்று தெரியாமல் அப்படியே மேலே எழுந்து பறந்து போனது பருந்து.

சாம்பல் குஞ்சின் அருகில் செவலைக் கோழி நின்றது. கண்களை மூடிப் பயத்துடன் உட்கார்ந்திருந்த சாம்பல் குஞ்சின் தலையில் தன் அலகுகளால் மெல்லத் தடவியது. சாம்பல் குஞ்சுக்கு அப்போது தான் உயிர் வந்தது.

இப்போது செவலைக் கோழியின் சத்தத்துக்கு முதலில் வந்து நிற்பது யார் தெரியுமா? நீங்களே சொல்லுங்களேன்..

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை அறிந்து உண்மையாக வாழுங்கள்
சொர்க்கம் உங்களை வந்தடையும்!
– ஓஷோ ரஜனீஷ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் வரலாற்றுச் சின்னங்களை கருங்கல்லில் பொறித்து வையுங்கள்

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் ஆரம்பிக்கப்பட்டு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் என்பது வரலாறு.

எனினும் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியால முன்றலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிலை இதுவரை நிறுவப்படவில்லை.

இதேபோல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தமிழர் கல்வியில் ஒரு கலங்கரை விளக்கு.

அத்தகு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அமையப்பெற்ற ஐந்து ஏக்கர் நிலத்தை ஈந்தளித்தவர் சைவப் பெருவள்ளல் சேர் பொன்.இராமநாதன் அவர்கள்.

சேர் பொன்.இராமநாதன் பிரபுவால் நிறுவப்பட்ட திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றப்படுவதற்கு முன்னதாகவே கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கான ஐந்து ஏக்கர் நிலத்தை சேர் பொன்.இராமநாதன் பிரபு ஈந்தளித்திருந்தார்.

ஆயினும் அவரின் கம்பீரமான உருவச் சிலை இன்னமும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வளாகத்தில் நிறுவப்படவில்லை.

இதேபோல் சைவத் தமிழ்ப் பாடசாலைகளின் சிருஷ்டி என்று கூறக்கூடிய இந்து போட் இராஜரத்தினம் அவர்களின் சிலை இதுகாறும் ஒரு பொதுவெளியில் அமைக்கப்படவில்லை.

இதுபோல் பல உதாரணங்களைக் கூற முடியும். இவை பாடசாலை சார்ந்தவை மட்டுமே.

இதுதவிர, எங்கள் மண்ணில் இருந்த மிகப்பெரும்வரலாற்றுப்பொக்கிஷங்கள் அழிந்துவிட்டன. அவற்றை மீள் புனரமைப்பதும் அந்த இடங்களில் அந்த வரலாற்றைப் பதிவு செய்வதும் அவசியம் என்ற விடயத்தை சிவபூமியின் ஸ்தாபகர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் அடிக்கடி வலியுறுத்தியுள்ளார்.

எனினும் அவர் கூறியதன் உட்பொருளை நம்மவர்கள் உணரத்தவறியதன் காரணமாக, இப்போது எங்கள் வரலாற்றுச் சின்னங்கள் – அடையாளங்கள் தொல்லியல் சின்னங்களாக ஆக்கப்படுகின்றன.

இலங்கையில் தொல்லியல் அடையாளம் என்றால், அது பௌத்த சிங்களத்துக்குரியது என்ற கீழ்நிலைச் சிந்தனை, தொல்லியல் திணைக்களத்திடம் இருப்பதன் காரணமாக இன்று தமிழ் மக்கள் மிகப்பெரும் வேதனைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

ஆகையால் தொல்லியல் திணைக்களத்தின் நிட்டூரத்தில் இருந்து எங்களை நாம் பாதுகாத்துக் கொள்ள, எங்கள் வரலாற்றுச் சின்னங்களை அடையாளப்படுத்துவோம்.

எங்கெல்லாம் எங்கள் தொன்மங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அதன் வரலாற்றை கருங்கல்லில் மும்மொழிகளிலும் பொறித்து வைப்போம்.

ஆம், எங்கள் குளங்கள், தமிழ் மன்னர்கள் நீராடிய ஏரிகள், சாபம் நீக்கிய சமுத்திரத் தீர்த்தங்கள், நாயன்மார்களின் பெயரால் அமையப்பெற்ற மண்டபங்கள், எங்கள் ஞானியர்களின் மடங்கள், மன்னர் காலத்தில் நாயன்மார்கட்டில் நிறுவப்பட்ட சரஸ்வதி மஹால் எனும் நூலகம்.

64 சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் எனப் போற்றப்படும் நயினை நாக பூசணி அம்மன் ஆலயத்தின் சரிதம், நல்லூர் இராசதானியில் தமிழ் வேந்தர்கள் நாலாபுறமும் அமைத்த ஆலயங்கள்.

எங்கெல்லாம் சைவ ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்டனவோ அந்த இடங்களிலெல்லாம் இது இன்ன ஆலயமாக இருந்தது என்பதனை வெளிப்படுத்துதல் என்றவாறு வரலாறுகள் கல்வெட்டுக்களில் பொறிக்கப்படல் வேண்டும்.

இதனைச் செய்யாதவிடத்து நம் வரலாற்று இடங்கள் எல்லாம் சங்கமித்தை தங்கியிருந்து களைப்பாறிய இடம் என்பதாக கதை புனையப்படும். கவனம்.

# இலங்கை இளைஞர்களுக்கு சுற்றுலாத்துறை சார் தொழில் பயிற்சியை வழங்க முன்வந்தது அவுஸ்திரேலியா

(கொழும்பு)

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை பெறுவதற்கு ஏற்ற பயிற்சியினை வழங்குவதற்கு உதவ அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது.

குறிப்பாக விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத் துறையில் ஈடுபடுபவர்களுக்கான வருவாயை அதிகரிப்பதற்கான ஒத்துழைப்பினை வழங்க தீர்மானித்துள்ளது.

அவுஸ்திரேலிய நிதி உதவியுடன் முன்னெடுக்கும் இந்த திட்டம் கல்வி அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உத்தேச திட்டத்திற்கு ஏற்றவகையில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய பிரதி உயர்ஸ்தானிகர் கடந்த வாரம் பொலன்னறுவையில் நவீன சமையல் பயிற்சி நிலையம் ஒன்றை திறந்து வைத்துள்ளார்.

நவீன சமையல் கலையை தமது வாழ்வாதாரமாக மேற்கொள்ள விரும்பும் இளைஞர்களுக்கு இந்த தொழிற் பயிற்சி பெரும் பக்கபலமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இலங்கையின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் நடவடிக்கைகளுக்கும் பொருத்தமான திறன் மேம்பாட்டிற்கு அவுஸ்திரேலியா நீண்ட காலமாக ஆதரவளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4,7)

## உணவுத் திருவிழா

(கோப்பாய்)

கோப்பாய்ப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரின் ஏற்பாட்டில் உணவுத் திருவிழா இன்று காலை 09 மணி தொடக்கம் மாலை 03 மணி வரை கோப்பாய் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாரம்பரிய மற்றும் இயற்கை முறையிலான சைவ, அசைவ உணவுகள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும், உணவுத் திருவிழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (4,7)

## ஈரான் வெளியுறவு அமைச்சர், அலிசப்ரி விசேட சந்திப்பு

(கொழும்பு)

ஈரானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, அந்நாட்டு வெளியுறவுகள் அமைச்சருடனான சந்திப்பில் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்புக்கள், வர்த்தகம், சுற்றுலா, அறிவியல் மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் உறவுகளை விரிவுபடுத்தல் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

அத்தோடு இவ்விடயங்கள் தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையிலான புதிய சாத்தியமான ஒப்பந்தங்கள் தொடர்பிலும், ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தங்களை செயல்படுத்தல் தொடர்பிலும் இரு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்களுக்கிடையிலான சந்திப்பின் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஏனைய நாடுகளுடன் நட்பு மற்றும் ஆக்கபூர்வமான முறையில் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் அலி சப்ரி, இலங்கையுடன் ஈரான் கொண்டுள்ள நட்புறவைப் பாராட்டியுள்ளார்.

அத்தோடு ஈரானிய தேயிலை சந்தையில் தனது நாட்டின் இருப்பை புதுப்பிக்க முயற்சிப்பதாகவும் அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4,7)

## கோண்டாவிலில் வாளுடன் கைதானவருக்கு பிணை

(கோப்பாய்)

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து வாள் ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது. அந்த வாளுடன் சந்தேகபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகளின்போது, அந்த வாள் ஆலயத்தின் வாள் என்றும் தெரியவருகிறது.

இந்நிலையில் பொலிஸார், அவரை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, அவரை ஆள் பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதி அளித்தார். (4,7,104)

## பதவியிலிருந்து விலக கோரி எவரும் கூறவில்லை
### சுகாதார அமைச்சர் கெஹலிய

சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறு தனது மனைவி மற்றும் பிள்ளைகள் மாத்திரமே தன்னிடம் கூறியுள்ளதாகவும், வேறு எவரும் அவ்வாறு கோரிக்கை விடுக்கவில்லை எனவும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி நோட்டீஸ் கொடுத்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் பரவி வரும் செய்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சவால்களில் இருந்து தப்பி ஓடுவதில்லை என்றும் அவற்றை எதிர்கொள்ளும் வலிமை தனக்கு உள்ளது என்றும் அவர் கூறினார்.

சுகாதாரத்துறையில் பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக்கொள்வதாகவும், அவற்றுக்கான தீர்வுகளை சிறந்த முறையில் வழங்குவதற்கு தாம் பாடுபடுவேன் என்றும் அவர் கூறினார்.

சுகாதாரத்துறையின் பிரச்சினைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல்களை வழங்க மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4,7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** ஐஸ் தொழிற்சாலை-சுப்பர்மடம், இன்பருட்டி, இன்பருட்டி பிள்ளையார் கோவில், முத்துமாரியம்மன் கோயில் அல்வாய், நாவலடி, ஸ்ரீலங்கா பாடசாலையடி, வியாபாரி மூலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மறக்கரம்பளை, தனேஸபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யா/நடேஸ்வரக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் கு:விமலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் க.ஜெ.பிறெட்லி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4,7)

## கொங்கிரீட் கற்கள் ஏற்றிய கப்பல் நீரில் மூழ்கியது

ஊர்காவற்துறை கண்ணகை அம்மன் ஆலய துறைமுகத்தில் இருந்து அனலைதீவுக்கு கொங்கிரீட் கற்களை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று நேற்றையதினம் கடலில் பகுதியளவில் மூழ்கியது.

இதன்போது கப்பலில் வேலை செய்யும் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

எனினும் வேறு எவருக்கும் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை. கப்பலை மீட்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (4,7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தில் வேகமாக பரவி வரும் புதிய வைரஸ்

# ஒமிக்ரோன் மாறுபாடு என கண்டறிவு

(லண்டன்)

**Eris என்ற குறியீட்டுப் பெயருடன் EG.5.1 என அழைக்கப்படும் புதியவகை கொரோனா இங்கிலாந்து முழுவதும் வேகமாக பரவி வருகின்றது.**

இங்கிலாந்தின் மோசமான காலநிலை காரணமாக அங்குள்ளமக்களுக்கு தலைவலி, காய்ச்சல், மூக்கில் நீர்வடிதல் போன்ற அறிகுறிகள் தென்படுகின்றன.

இது அதிகமான மக்களிடம் வேகமாக பரவி வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்கிலாந்தின் சுகாதார பாதுகாப்பு முகவரகம் இது குறித்து ஆராய்ந்த போது, இது ஒமிக்ரோனின் மாறுபாடு அடைந்த வைரஸ் கிருமி என கண்டறியப்பட்டது.

இந்த வைரஸ் இங்கிலாந்தில் ஏழு பேரில் ஒருவருக்குப் பரவியிருப்பதாகவும் இதற்கு கிரேக்க தெய்வத்தின் பெயரான எரிஸ் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ரஷ்யாவின் எண்ணெய் கப்பலை தாக்கி அழித்த உக்ரைன்



(கீவ்)

கருங்கடலில் உக்ரைன் நடத்திய தாக்குதலில் 11 பணியாளர்களுடன் பயணித்த ரஷ்யாவின் எண்ணெய் கப்பல் ஒன்று சேதமடைந்துள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கெர்ச் ஜலசந்தியில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் கப்பலின் இயந்திர அறை சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலின் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் ரஷ்ய தரப்பினர் அறிவித்துள்ளனர்.

ரஷ்யாவின் கடல் போக்குவரத்து நிறுவனம் கிரிமியன் பாலத்திற்கு தெற்கே 17 மைல் தொலைவில் இந்த தாக்குதல் இடம்பெற்றது.

கடற்படையின் ஆளில்லா விமானம் மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் உக்ரைன் இதுவரை பகிரங்கமாக கருத்துக்கள்எதுவும்தெரிவிக்கவில்லை.

அதேநேரம், கடந்த வெள்ளிக்கிழமையும் ரஷ்யாவின் கப்பல் ஒன்று தாக்குதலுக்கு இலக்கானமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி அவதியுறும் பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. இந்நிலையில், தற்போது அங்கு பணவீக்கம் 30 சதவீதமாக உயர்ந்துள்ளது.

காய்கறிகள் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உச்சம் தொட்டுள்ளது. தக்காளி, வெங்காயம், அரிசி, கேஸ் சிலிண்டர், பெற்றோல், டீசல் என 54 அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

இதனால் மக்கள் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றனர். விலைவாசி உயர்வால் அத்தியாவசிய பொருட்கள் வாங்கமுடியாமல் தவித்து வருகின்றனர்.

பாகிஸ்தானின் கடன் சுமை அதிகரித்துள்ள நிலையில், அதன் அந்நிய செலாவணி கையிருப்பு முற்றிலும் குறைந்துள்ளது. இதனால், தேவையான பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடியாத சூழலில் அந்நாடு உள்ளது.

பொருளாதார நெருக்கடி சூழல் தொடர்ந்து தீவிரமடையும் பட்சத்தில் பாகிஸ்தானில் நடுத்தர வர்க்க மக்கள் வறுமை நிலைக்கு தள்ளப்படுவர் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (நி)

## நிலவின் சுற்றுப்பாதையில் சந்திராயன்-3

### இஸ்ரோ தகவல்



(டில்லி)

சந்திராயன்-3 விண்கலம் நிலவின் சுற்றுப்பாதைக்குள் வெற்றிகரமாக செலுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திராயன்-3 விண்கலத்தை இஸ்ரோ வடிவமைத்தது. இந்த விண்கலம் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது. தற்போது பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து விண்கலத்தை இயக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் சந்திராயனை நிலவுக்கு நெருக்கமாக கொண்டு செல்லும் விதமாக அதன் புவி நீள்வட்ட சுற்றுப்பாதை தூரம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் 1 ஆம் திகதி சந்திராயான் புவி ஈர்ப்பு விசையில் இருந்துவிலக்கப்பட்டு நிலவை நோக்கி செல்லும்படி அதன் பயணப்பாதை மாற்றப்பட்டது.

5 நாட்கள் பயணத்துக்கு பின் நிலவுக்கு அருகே விண்கலம் நேற்று முன்தினம் இரவு சென்றது. இதையடுத்து விண்கலத்தை நிலவின் வட்ட சுற்றுப்பாதைக்குள் செலுத்தும் முயற்சி 7.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது. அப்போது சந்திராயன்-3 வெற்றிகரமாக நிலவின் சுற்றுப்பாதைக்குள் உந்தி தள்ளப்பட்டது. (நி)

## வீடு தீப்பிடித்து எரிந்ததில் தந்தையும் 5 மகன்களும் பலி

### அவுஸ்திரேலியாவில் துயரச் சம்பவம்



(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேர்னில் கரையோர தீவொன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் தந்தையும் ஐந்து மகன்களும் உயிரிழந்த பரிதாப சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீடு தீப்பிடித்து எரிந்ததில் 31 வயது தந்தையும் மூன்று முதல் 11 வயதுடைய ஐந்து புதல்வர்களும் உயிரிழந்துள்ளனர்.

ரசல்தீவில் உள்ள டொட்மன் வீதி வீட்டில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாயார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததால் தப்பியுள்ளார்.

அந்த பெண் தனது முழு குடும்பத்தையும் இழந்துவிட்டார் என பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரம் முறிந்து...

வந்த கார் ஒன்று துவிச்சக்கரவண்டியில் பயணித்த முதியவர் ஒருவர் மீது மோதி, அதன்பின்னர் அருகில் நின்ற மரத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின்போது முறிந்த மரமானது அங்கு பேருந்துக்காக காத்திருந்த பெண்மணியின் மீது விழுந்தது.

இந்நிலையில் படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (4-7,104)

## ஜனநாயக...

13வது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகளின் அபிப்பிராயங்களை வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவித்திருந்தார்.

13வது திருத்தம் தொடர்பில் ரெலோ, புளொட் என்பன தனித்தனியாக யோசனைகளை சமர்ப்பிக்காமல், தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக செயற்படும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 5 கட்சிகளுடனும் கலந்துரையாடி, கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

இதுதவிர, ஜனாதிபதி ரணில் பதவியேற்ற பின்னர் நடைபெற்ற சிங்கள ஆக்கிரமிப்பு, மத ஆக்கிரமிப்பு சம்பவங்களை பட்டியலிட்டும், பறாளாய் முருகன் கோயில் அரச மரத்தை உரிமை கோரும் முறையற்ற வர்த்தமானி உள்ளிட்ட தமிழர்களின் தொல்லியல் சின்னங்களை அபகரிக்கும் வர்த்தமானிகளை மீளப்பெற வலியுறுத்தியும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4-7)

## தேங்காய் பறிக்க...

சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் முழங்காவில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7,315,316)

## வடக்கு ரயில்...

ஏற்படுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (4-7)

## ஜனாதிபதி...

தற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளக முரண்பாடுகள் மேலோங்கியுள்ளன.

இவ்வாறானதொரு நிலையில் ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்த கருத்து முரண்பாடுகளை தவிர்க்கும் வகையில் பல்வேறு கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், அது சாத்தியப்படாத நிலையில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கலந்துரையாடலை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ம-7)

## இந்திய மீனவர்...

கடற்படையினர் மீனவர்களை எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் மீன் பிடிப்பதாக ஒலிபெருக்கி மூலம் எச்சரித்துள்ளனர்.

இதனால் அப்பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்கள் கைது நடவடிக்கைக்கு அஞ்சி நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இதையடுத்து நேற்றுக் காலை மீனவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது ரோந்து பணியில் இருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக மீனவர்களை விரட்டியடித்துள்ளனர்.

நடுக்கடலில் மீனவர்களை மீன் பிடிக்க விடாமல் இலங்கை கடற்படை தொடர்ந்து விரட்டியதால் மீனவர்கள் மீன் பிடிக்க முடியாமல் படகு ஒன்றுக்கு சுமார் 70,000 வரை நஷ்டத்துடன் நேற்றுக் மாலை மீனவர்கள் கரை திரும்பியதாக தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (4-7)

## மின்னை சிக்கன...

தற்போது மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை தினசரி மின்சாரத் தேவை அதிகமாக உள்ளதாகவும் குறித்த சபை தெரிவித்துள்ளது.

எனவே, அக் காலப் பகுதியில் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் மின்சாரத்தை பயன்படுத்தினால், தடைகளை குறைத்து மின்சாரத்தை வழங்க முடியும் என இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# தமிழர்களை ஏமாற்றும் ரணில்

## அநுரகுமார குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்பொழுது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான நாடகத்தையே சர்வகட்சி கூட்டத்தை மையப்படுத்தி முன்னெடுத்து வருகிறார்.

இதற்கு நாம் துணை போக முடியாது. 13 ஆவது திருத்த சட்டம் சம்பந்தமாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்துகின்ற பொழுது அது சம்பந்தமான பரிந்துரைகளை செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (4-7)

## இணை...

களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

அந்த உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்போது ஒன்லைன் முறையின் ஊடாக வரிகளை செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நிர்மாணத்துறைக்கு தேவையான அனுமதிகளை ஒன்லைன் முறையின் கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வலியுறுத்தியுள்ளது. (4-7)

## வெளி...

உள்நாட்டுப் பிரச்சினைகளை நாமேதான் பேசித் தீர்க்க வேண்டும். வெளிநாடுகளை நாடுவதால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

எனவே, அரசியல் தீர்வு விடயத்தில் வெளிநாடுகள் அழுத்தம் எதனையும் வழங்க முடியாது. எங்கள் பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். இதை உணர்ந்து தமிழ்த் தலைவர்கள் செயற்பட வேண்டும்." எனத் தெரிவித்தார். (4-7)



நாகபூசணி அம்மன் அருளுடன்
NLB, DLB கனகலிங்கம் திலகவதி
யாழ்.முகவர்கள்

7 தினங்களில் பல இலட்சம் பெறுமதியான பரிசுகள் 3 முகவர்கள் மூலம் NLB **கனகலிங்கம்**, DLB **திலகவதி**, NLB **கனகலிங்கம் சிவகரன்** 03.08.2023 NLB **கனகலிங்கம்** மூலம் **தனநிதானய** லொத்தர் சீட்டிழுப்பில் **100000 ரூபாயும்** DLB **திலகவதி** முகவர் ஊடாக **அதகோடிபதி** லொத்தர் சீட்டிழுப்பில் **200000 லட்சம்** ரூபாயும் 05.08.2023 **அபிவிருத்தி அதிர்ஷ்டம்** லொத்தர் சீட்டிழுப்பில் **100000** ரூபாயும் வெல்லப்பட்டுள்ளது. மேலும் 3 முகவர் ஊடாக 7 தினங்களில் இதர பரிசுகளாக NLB **கனகலிங்கம்** மூலம் **14.40.020/=** DLB **திலகவதி** ஊடாக 12,620,10/= NLB **கனகலிங்கம் சிவகரன்** ஊடாக **1.15000** பணப் பரிசும் இந்த வாரம் வெல்லப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

மொத்த பரிசுத் தொகை - 2,81.7030/=

அடுத்தவாரம் சந்திப்போம்

(16637)



மெகா பவர் — திகதி 06/08/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1546 — D 21 17 37 55 71 — 42019

தன நிதானய — திகதி 2023.08.06 — சீட்டிழுப்பு இலக்கம் 1228 — C 12 65 66 69 C — 08589

லகி 7 — திகதி 06.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 024 — L7 இலக்கம் 30 — வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 020909

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3440 — சீட்டிழுப்பு திகதி 06.08.2023 — P 18 25 36 37 — P 02997

ஹந்தஹன — சீட்டிழுப்பு திகதி 2023.08.06 — சீட்டிழுப்பு இலக்கம் 507 — ரிஷபம் 25 26 35 39 ரிஷபம்

மஹஜன சம்பத — திகதி 2023/08/06 — சீட்டிழுப்பு இலக்கம் 5198 — G 1 4 3 6 2 1

சசிரி — வெற்றி வாரம் 359 — சீட்டிழுப்பு திகதி 2023.08.06 — கபிலம் — வெற்றி இலக்கங்கள் 09 26 37 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,631,920/-

சுப்பர் போல் — சீட்டிழுப்பு வாரம் 2172 — வர்ணம் செம்மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2023.08.06 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 12 14 28 66 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,450,620.40 — "இரண்டாம் வரம்" 45 58 61 68 T

சனிதா — திகதி 2023.08.06 — வெற்றி வாரம் 4333 — வர்ணம் இளஞ்சிவப்பு — 07 26 44 50 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,391,576.00 — "இரண்டாம் வரம்" 02 11 52 73 P

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3884 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2023.08.06 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 10 34 49 53 கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,776,796/- — "இரண்டாம் வரம்" 06 35 47 61 சிம்மம்

கப்ருக — திகதி 06.08.2023 — வெற்றி வாரம் 1348 — வர்ணம் மஞ்சள் — X 14 01 24 25 58 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.425,083,804.20 — "இரண்டாவது வாய்ப்பு" 14 51 54 64 V — தொலை பேசி 011-2 333 546-47 — Web : www.dlb.lk

அத கோடிபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 1998 — சீட்டிழுப்பு திகதி 2023.08.06 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,763,472/- — 01 03 25 63 G — "இரண்டாம் வரம்" 19 23 34 62 X


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் பலி

(திருகோணமலை)

திருகோணமலை - குச்சவெளி பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பள்ளவக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றதாகவும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

சடலம் விபத்துக்குள்ளான இடத்தில் காணப்படுவதாகவும், விபத்து தொடர்பில் குச்சவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4.7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16634)

076 825 7716 (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் கைதடி வீதியில் உரும்பிராய் சந்திக்கும் கோப்பாய் கிருஸ்ணர் கோவிலிற்கும் இடையில் உரும்பிராய் சந்தியிலிருந்து 1.5Km தூரத்தில் வீதியில் இடது பக்கத்தில் 15 அடி அகலபாதையுடன் கிணற்றுடன் கூடிய 3 ஆவது 7.5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (16617)

077 218 4878

## சாரதி தேவை

 லோடர் சாரதி தேவை.

சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்

இல.55,57

ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.



(C-7021)

## காசாளர் தேவை

யாழ் நகரில் உள்ள கருவாட்டுக் கடைக்கு காசாளர் தேவை.

தொடர்புகளுக்கு (16635)

077 222 8312

## பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant), கிளிப் போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

கம்சியா

பற்சிகிச்சைப் பிரிவில்

(யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக. BOC வங்கிக்கு அருகில்) நடைபெறுகிறது.

578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-7020)

077 375 4490

077 220 2769

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/= (16349)

T.P:077 544 8503

## கட்டிட விலை மனுக் கோரல்
## சிவபுர வளாகம், A9 வீதி, முகமாலை

சிவபுர வளாகத்தில் அமைந்துள்ள மூதாளர் இல்லத்தின் மேல்தள கட்டிட வேலைக்கான விலை மனுக்கள் தகைமை வாய்ந்த கட்டிட ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகிறது.

விண்ணப்பப் படிவத்தையும் ஏனைய விபரங்களையும் முகமாலை சிவபுர வள்கத்தில் அலுவலக நேரத்தில் நேரில் சென்று பெற்று 15.08.2023 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக

**நிறைவேற்றுப் பணிப்பாளர், சிவபுர வளாகம், A9 வீதி, முகமாலை.**

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்,
சிவபுர வளாகம்,
A9 வீதி, முகமாலை.

(16640)

## CANADA VISITOR VISA



VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7023)

0777-068-777

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

(C-7023)

யாழ் வீரசிங்க மண்டபத்தில்

## இன்றும் நாளையும்

## ஆடி மாத ஆடை தள்ளுபடி

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலை சிறந்த ஆடைகள்



டொப் 500/=

ரெடிமேட் சல்வார் 750/=

திருமணப்பட்டுச் சாறிகள்
கொட்டன் சாறிகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
புத்தம் புது டொப் வகைகள்
மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடை தெரிவுகள்.....

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

## இந்தியன் செலக்ஷன்

காலம்: ஆவணி 07, 08

இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்) (16638)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு**

நிலப்பரப்பு

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 14 இலட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு :-

ஜெயம்

077 814 7389

077 986 5457

(16642)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org